Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

SATURDAY, AUGUST 21, 2021

சனிக்கிழமை 21, 2021 | ஒளி: 07 கதிர்: 80 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு இல்லை



நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு இல்லை என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, நேற்று (20) தெரிவித்தார்.

எதிர்வரும் 22 நாள்களுக்குத் தேவையான டீசல் மற்றும் 18 நாள்களுக்குத் தேவையான பெட்ரோல் என்பன தற்போது நாட்டில் இருப்பதாகவும் அவர் கூறினார்.

தொடர்ச்சி P2



## பெற்றோர் முன்னிலையில் இருவரும் கரம் கோர்த்தனர்

### வாழ்த்துக்கூற வந்தவர்கள் விரட்டியடிப்பு

எஸ்.சதீஸ், எம். கிருஸ்ணா

பொகவந்தலாவை, ஆரியபுர பகுதியிலுள்ள திருமண மண்டபமொன்றில், சுகாதார விதிமுறைகளை மீறி, ஏற்பாடு செய்யப்பட்டிருந்த திருமண நிகழ்வொன்று, பொகவந்தலாவை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகளால், நேற்று (20) காலை தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## வேட்டையடைப்பு கோவிலுக்குப் பூட்டு



முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய், உயிலங்குளம், வேட்டையடைப்பு பிள்ளையார் கோவில், பிராந்திய வைத்திய சுகாதார அதிகாரிகளால் நேற்று (20) முதல் மூடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

### தனிமைப்படுத்தல் ஊரடங்கு 10 நாள்களுக்கு அமல்

# மீறினால் சட்டம் பாயும்

**ஊரடங்கு காலத்தில் தடுப்பூசி ஏற்றப்படும்**

**அத்தியாவசிய, ஏற்றுமதிச் சேவைகள் தொடரும்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவின் தீர்மானத்தின் பிரகாரம், நேற்று (20) இரவு 10 மணிக்கு அமல்படுத்தப்பட்ட தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம், இம்மாதம் 30ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4 மணி வரையிலும் அமலில் இருக்கும்.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமலில் இருந்தாலும் அத்தியாவசிய சேவைகள் உள்ளிட்ட இன்னும் சில சேவைகள் தொடரும். அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரையில் தடுப்பூசி ஏற்றப்படாத 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி வழங்குவதை இலக்காகக் கொண்டு தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை அமல்படுத்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதுடன், செப்டம்பர் 01ஆம் திகதிக்கு முன்னர், அவர்கள் அனைவருக்கும் தடுப்பூசியை வழங்கி முடிக்குமாறு, ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

தொடர்ச்சி P2

## சுகாதார ஊழியர்களுக்கு மூன்றாவது டோஸ்



சுகாதாரத் துறையின் அனைத்து ஊழியர்களுக்கும் மூன்றாவது டோஸ் கொவிட்-19 தடுப்பூசியை பெற்றுக் கொடுக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

### அத்தியாவசிய பொருள்களுடன்

## மீண்டும் சதொச நிவாரணப்பொதி



அத்தியாவசிய பொருள்கள் 20 அடங்கிய 1,998 ரூபாய் பெறுமதியுடைய நிவாரணப் பொதியை விநியோகிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டு உள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### யாழ். போதனாவுக்கு

## இராணுவம் குருதி கொடை



டி.விநித்தா

யாழ். போதனா வைத்தியசாலையில் நிலவும் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக, இராணுவத்தினரால் நேற்று (20) இரத்ததானம் செய்யப்பட்டது.

தொடர்ச்சி P2

### சுகாதார அமைச்சின்

## உயர் பதவிகளில் மாற்றம்?

சுகாதார அமைச்சின் உயர் பதவிகளில் மாற்றங்கள் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனா ஒழிப்பு நடவடிக்கைக்காக, குறித்த அமைச்சின் உயர் அதிகாரிகளின் செயற்பாடுகளில் திருப்தியின்மையே இந்த மாற்றத்துக்கு காரணம் எனவும் அமைச்சின் தகவல்கள் தெரிவித்துள்ளன.

தொடர்ச்சி P2

### சத்துருக்கொண்டானில்

## மோட்டார் குண்டு மீட்பு

க.விஜயரெத்தினம்

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சத்துருக்கொண்டான் பிரதேசத்தில் கும்பிளமடு வீதியில் கைவிடப்பட்ட நிலையில், 81 மில்லிமீட்டர் அளவுடைய மோட்டார் குண்டு ஒன்று, நேற்று (20) காலை மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து, திராய்மடு விசேட அதிரடிப்படையினரும் இணைந்து, தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணிக்குள் இருந்து இந்த மோட்டார் குண்டை மீட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## உள்ளே

எதற்காக இந்த மாற்றம் ? P3

நாய்களுக்குப் பரவும் பார்வோ வைரஸ் P4

தேயிலை தேசத்து ராணி P5

டோக்கியோ 2020 ஒலிம்பிக்கில் P8

### டிக்கோயா–கிளங்கனில்

## 4 வைத்தியர்களுக்கு கொரோனா தொற்று



எம்.கிருஸ்ணா, எஸ்.சதீஸ்

டிக்கோயா, கிளங்கன் மாவட்ட ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்களில் நான்கு வைத்தியர்கள் உள்ளிட்ட 17 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## எசல பெரஹரா நடைபெறும்

நாடளாவிய ரீதியில், நேற்று (20) இரவு 10 மணிமுதல், எதிர்வரும் 30ஆம் திகதி அதிகாலை 4 மணிவரையிலும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டாலும் கண்டி எசல பெரஹரா முன்னெடுக்கப்படும்.

பொதுமக்கள் பங்குபற்றல் இன்றி, எசல பெரஹரா நடைபெறும் என்று இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்தார்.

கடந்த 13ஆம் திகதியன்று ஆரம்பமான கண்டி எசல பெரஹரா, நாளை (22) ஞாயிற்றுக்கிழமை பெரஹராவுடன் நிறைவடையும் என்பது குறிப்பிடத்தக்கது.




## ஒட்சிசனுடன் 'சக்தி' திரும்புகிறது

கொவிட்-19 தொற்றாளர்களுக்கான மருத்துவ ஒட்சிசன் சிலிண்டர்களை பெற்றுக்கொள்வதற்காக திருகோணமலை துறைமுகத்திலிருந்து கடந்த 17ஆம் திகதி இந்தியாவுக்குப் புறப்பட்ட 'சக்தி' கப்பல் சென்னையில் இருந்து, நேற்று (20) இலங்கைக்குத் திரும்பியுள்ளதாக, இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

இந்தக் கப்பல், நாளை (22) கொழும்பை வந்தடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உலர்ந்த மஞ்சள் 650 கி.கி மீட்பு

### மூவர் கைது



ரஸீன் ரஸ்மின்

கற்பிட்டி, இப்பந்தீவு பகுதியில் 650 கிலோகிராம் உலர்ந்த மஞ்சளுடன், சந்தேக நபர்கள் மூவர், கடற்படையினரால் நேற்று முன்தினம் (19) இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடமேற்கு கடற்படை கட்டளையின் கடற்படையினர், மேற்படி தீவுப் பகுதியில் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போதே, சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மஞ்சள் மூடைகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சந்தேகத்துக்கிடமான டிங்கி இயந்திரப் படகை கடற்படையினர் பரிசோதனை செய்தனர். இதன்போது, அந்த படகில் 21 உர மூடைகளில் மறைத்து வைக்கப்பட்ட 650 கிலோகிராம் உலர்ந்த மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

### தினேஷ், விமல், வாசு, பெசில்

## தனித்தனி சந்திப்பு

அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் சிலவற்றின் தலைவர்கள் தனித்தனியாக நிதியமைச்சர் பெசில் ராஜபக்‌ஷவை சந்தித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

LK Newspapers Viber Community

PAGE 1 தொடர்ச்சிகள்

# மீறினால் சட்டம் பாயும்

பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் கிராமிய கொவிட் ஒழிப்புக் குழுக்கள் மூலம் இந்த நபர்களை அடையாளம் கண்டு தடுப்பூசி ஏற்ற, 23ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் சுகாதாரப் பிரிவுக்கு அறிக்கை அளிக்கப்பட வேண்டும்.

மேலும், 1906 என்ற அவசர இலக்கத்துக்கு அல்லது தேசிய கொவிட் ஒழிப்பு மையத்துடன் தொடர்புகொண்டு பதிவு செய்யும் வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இந்தத் தடுப்பூசித் திட்டத்தை, இராணுவத் தளபதியின் மேற்பார்வையின் கீழ், சுகாதாரத் துறையின் அறிவுறுத்தல்படி மேற்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டது.

ஜனாதிபதி அலுவலகத்தில் கொவிட் ஒழிப்பு விசேட குழுவுடன் நேற்று (20) இடம்பெற்ற சந்திப்பின் போதே, ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள காலத்தில், விவசாயம், ஆடை மற்றும் நிர்மாணத் தொழில்கள், ஏற்றுமதித் தொழில்கள், மருந்தகங்கள் உள்ளிட்ட அத்தியாவசியச் சேவைகள், விமான நிலையங்கள் மற்றும் விமான நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாகப் பேணவும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறுபவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்டத்தை அமுல்படுத்துமாறும், பொலிஸ் மா அதிபருக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

இக்காலப்பகுதியில், சுதேச மருந்துகளை கிராமிய மற்றும் நகர மட்டத்தில் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு, சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சருக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

## நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு இல்லை

அத்துடன், இவ்வாரத்தில் மேலுமொரு எரிபொருள் கப்பல் இலங்கையை வந்தடையவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

"எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட்டால், வேறு எவருக்கும் முன்பாக நான் நாட்டு மக்களுக்குச் சொல்வேன். நான் மக்களுக்கு உண்மையாக இருந்தேன். அவ்வாறே விலை உயர்வு குறித்து முன்கூட்டியே தெரிவித்தேன். வெளிநாட்டு நாணய நெருக்கடி பற்றியும் முதலில் அறிவித்திருந்தேன்" என அவர் தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், நாட்டில் எரிபொருள் பற்றாக்குறை ஏற்படும் என்ற தகவலின் காரணமாக பல பகுதிகளில் பெட்ரோல் நிரப்பும் நிலையங்களுக்கு அருகில் நீண்ட வரிசைகளில் மக்கள் காத்திருந்தமையை நேற்றுக் காண முடிந்தது.

## பெற்றோர் முன்னிலையில் இருவரும் கரம் கோர்த்தனர்

நாட்டில் தீவிரமடைந்து வரும் கொரோனா மற்றும் டெல்டா தொற்றுக்கள் காரணமாக, திருமண நிகழ்வு மற்றும் பொது நிகழ்வுகளுக்கு அரசாங்கம் தடைவிதித்துள்ள நிலையில், சுகாதார முறைகளை மீறி இந்தத் திருமண நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டதாகவும், இதில் சுமார் 25கும் மேற்பட்டோர் கலந்துகொண்டதாகவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

பொகவந்தலாவை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிக்கு கிடைத்த தகவலுக்கமைய, குறித்த திருமண மண்டபத்துக்கு விரைந்த சுகாதார அதிகாரிகள் மற்றும் பொகவந்தலாவை பொலிஸார், அங்கு கூடியிருந்தவர்களை எச்சரித்து வெளியேற்றியுள்ளனர்.

அத்துடன், மணமகன், மணமகள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுடன் மாத்திரம் திருமணத்தை நடத்துமாறு அறிவுறுத்தியுள்ளதுடன், திருமண மண்டபத்தின் உரிமையாளரும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

## வேட்டையடைப்பு கோவிலுக்குப் பூட்டு

அத்துடன், கோவிலில் நேற்றையதினம் பூஜை நடவடிக்கைகளில் ஈடுபட்ட பூசகர்கள் இருவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கோவிலில் இடம்பெற்ற திருவிழா மற்றும் அன்னாதான நிகழ்வின் போது, கோவில் தொண்டர்கள் மற்றும் பக்தர்கள் சுகாதார விதிமுறைகளை பின்பற்றாமல் கலந்துகொண்டார்கள் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேவேளை, பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரியால் 12-08-2021 திகதியன்று வெளியிடப்பட்ட வழிபாட்டு இடங்களில் கொவிட்-19 சுகாதார நடைமுறைகளை அமுல்படுத்தல் தொடர்பான அறிவித்தல்களுக்கு உட்பட்டும் வேட்டையடைப்பு பிள்ளையார் கோவிலை தனிமைப்படுத்தியுள்ளதாகவும் சுகாதார அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

## மீண்டும் சதொச நிவாரணப்பொதி

நேற்று (20) முதல் ஆரம்பிக்கப்பட்ட விநியோக நடவடிக்கைகள் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு முன்னெடுக்கப்படும் என்றார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பு ஒன்றிலேயே அவர் இதனைக் கூறினார்.

அத்துடன், '1998' என்ற இலக்கத்துக்கு அழைப்பதன் மூலம் இந்த நிவாரணப் பொதி வீட்டுக்கே கொண்டு வந்து தரப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், 2,600 ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய 20 அத்தியாவசியப் பொருள்களே இந்த 1,998 ரூபாய் நிவாரணப் பொதியில்உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## தனித்தனி சந்திப்பு

இதன்போது, வரவு - செலவுத் திட்ட யோசனை குறித்து கலந்துரையாடியதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

தினேஷ் குணவர்த்தன தலைமையின் மக்கள் ஐக்கிய முன்னணி, விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகியவை இவ்வாறு சந்திப்பில் ஈடுபட்டுள்ளன.

இந்தச் சந்திப்புகள் அனைத்தும் தனித்தனியாக இடம்பெற்றுள்ளன.

நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ, வரவு - செலவுத் திட்ட யோசனை குறித்து பல்வேறு தரப்பினருடனும் அண்மைக்காலமாக கலந்துரையாடி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சுகாதார ஊழியர்களுக்கு மூன்றாவது டோஸ்

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்துக்கிடையில் நேற்று முன்தினம் (19) பிற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலில் இவ்வாறு இணக்கம் காணப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போதைய கொரோனா வைரஸ் பரவல் காரணமாக, சுகாதாரப் பிரிவினர் அதிகளவில் தொற்றுக்கு உள்ளாகும் அபாயம் காணப்படுவதாக அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்காரணமாக, சுகாதாரப் பிரிவினருக்கு மூன்றாவது டோஸ் தடுப்பூசியை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் அந்தச் சங்கம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

இரண்டாவது தடுப்பூசியை பெற்று 5 மாதங்களின் பின்னர் மூன்றாவது டோஸ் தடுப்பூசியை பெற்றுக் கொடுக்க தற்போது இணக்கம் காணப்பட்டுள்ளது.

## மோட்டார் குண்டு மீட்பு

இது யுத்த காலப்பகுதியில் கைவிடப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதுடன், மட்டக்களப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மூட நம்பிக்கையை அகற்றிவிட்டு அறிவியல் ரீதியாக தீர்மானிக்கவும்

மூட நம்பிக்கையை அகற்றி, அறிவியல் ரீதியாக தீர்மானித்து நாட்டை மூடுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அரசாங்கத்தை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

சுய புத்தியுடன் செயற்படக்கூடிய எவரையும் சலிப்படைய வைக்கும் நிலைக்கு நமது நாடு வீழ்ச்சியடைந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வாரத்தில் பதிவான கொரோனா தொற்றுக்குள்ளானோர் மற்றும் உயிரிழந்தோரின் எண்ணிக்கையை மாத்திரம் கருத்திற்கொண்டாலே நாடு என்ற ரீதியில் நாம் தள்ளப்பட்டுள்ள தரம் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நிலைப்பாடு சீர்குலைந்து இருள் சூழ்ந்துள்ளதென எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழப்போர் தொடர்பான பொறுப்பை அரசாங்கம் ஏற்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் அறிமுகப்படுத்திய பயணக் கட்டுப்பாடு நடைமுறை சாத்தியமற்ற, பயனற்ற செயற்பாடு என்பதனை நாள்தோறும் பதிவாகும் தொற்றுக்குள்ளாவோர் மற்றும் உயிரிழப்போரின் எண்ணிக்கை உறுதிப்படுத்துகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

நாளாந்தம் நடத்தப்படும் பரிசோதனை எண்ணிக்கையை அதிகரிக்கவும் அத்தியாவசியமான ஔடதங்களை துரிதமாக இறக்குமதி செய்யவும் சுகாதாரக் கட்டமைப்பு வீழ்ச்சியடையாதவாறு உரிய வகையில் நிர்வகிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தை சார்ந்தது என எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## உயர் பதவிகளில் மாற்றம்?

இதற்கமைய, விசேடமாக சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தனவின் பங்களிப்பு போதியளவு கிடைக்காமையால், அவரது பதவியில் மாற்றங்கள் செய்ய அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான கொரோனா ஒழிப்பு செயலணிக் கூட்டத்தில், சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு இது தொடர்பான தெளிவுப்படுத்தல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எனவே, பணிப்பாளர் வைத்தியர் அசேல குணவர்தனவுக்கு வேறு ஒரு பதவி வழங்கப்படவுள்ள நிலையில், சுகாதார சேவை பணிப்பாளர் பதவிக்கு, விசேட வைத்தியர் அமல் ஹர்ஷ த சில்வா நியமிக்கப்படவுள்ளாரென்றும் தகவல்கள் தெரிவித்துள்ளன.

அவர் இதற்கு முன்னர் கொரோனா ஒழிப்புத் தொடர்பான இராஜாங்க அமைச்சின் செயலாளராகவும் சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

இந்தப் பதவி மாற்றங்களுக்கு, அரச சேவை ஆணைக்குழு மற்றும் அமைச்சரவையின் அனுமதியைப் பெற அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதேவேளை, கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலுள்ள பிரதான வைத்தியசாலைகள் இரண்டினது பணிப்பாளர்களையும் மாற்றுவதற்கும் சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரியவருகின்றது.

## நோயாளர் காவுவண்டி இன்மையால் மாந்தை கிழக்கு மக்கள் அவதி

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு, நட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலைக்கு உரிய நோயாளர் காவுவண்டி இன்மையால் பிரதேச மக்கள் பெரும் அவதிக்குள்ளாவதாக தெரிவிக்கின்றனர்.

குறித்த வைத்திய சாலைக்கு மாந்தை கிழக்கு பிரதேசத்திற்குட்பட்ட மக்கள் மட்டுமன்றி அண்மையில் உள்ள வெளியிட மக்களும் மருத்துவ வசதிகளுக்காக வருகை தருகிறார்கள்.

இதேவேளை குறித்த வைத்தியசாலைக்கு ஒரு நோயாளர் காவுவண்டி உள்ள போதும் அதன் சாரதி விடுப்பில் செல்லும் வேளை பதில் கடமை சாரதி இன்மையால் மக்கள் பெரும் அவதிப்படுவதாக தெரிவித்தனர்.

மல்லாவி ஆதார வைத்தியசாலையில் நோயாளர் காவுவண்டிகள் உள்ளபோதும், நட்டாங்கண்டல் வைத்திய சாலையின் நோயாளர் காவுவண்டியின் சாரதி விடுப்பில் செல்லும் காலத்தில் குறித்த நோயாளர் காவுவண்டி மல்லாவி ஆதார வைத்தியசாலையில் விடப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த விடயம் தொடர்பில் நட்டாங்கண்டல் பிரதேச வைத்திய அதிகாரியை தொடர்பு கொண்டு வினவியபோது, தமது அனுமதி பெறப்படாமலேயே குறித்த நோயாளர் காவுவண்டி மல்லாவி ஆதார வைத்தியசாலையில் விடப்படுவதாகவும், கொவிட்-19 தடுப்பூசி பெற்றுக்கொள்ள மக்கள் வருகை தந்திருப்பதாகவும், ஆனால் மக்களுக்கான ஒவ்வாமை தொடர்பான பிரச்சினைகள் ஏற்படுமிடத்து நோயாளர் காவுவண்டி கடமையில் இல்லை என்றும், தமது வைத்திய சாலையின் சாரதி விடுப்பில் செல்லும் சந்தர்ப்பங்களில் நோயாளர் காவுவண்டி மல்லாவி ஆதார வைத்தியசாலையில் விடப்படுவதாலும் பிரதேச மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றனர் எனவும் தெரிவித்தார்

இதேவேளை மிகவும் பின்தங்கிய கிராமமான ஜயங்கன்குளம் பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் காவுவண்டி உள்ள போதிலும் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக நோயாளர் காவுவண்டி வேறொரு பிரதேச வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளமையால் அப்பிரதேச மக்களும் நோயாளர் காவுவண்டி இன்மையால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

## இராணுவம் குருதி கொடை

யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் கொடித்துவகவின் பணிப்புரைக்கு அமைவாக, யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் இந்த இரத்ததானம் வழங்கப்பட்டது. 51 படைப்பிரிவின் கீழ் உள்ள படைமுகாம்களைச் சேர்ந்த சுமார் 200 இராணுவத்தினர், யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கி வைத்தியர் மற்றும் தாதியர்களின் முன்னிலையில் இதன்போது இரத்ததானம் வழங்கினர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்கில், இந்த இரத்ததானம் வழங்கப்பட்டது.

உயிர்காக்கும் இந்த உன்னதப் பணியில், அனைவரும் பங்குகொண்டு, இரத்ததானம் வழங்க முன்வருமாறும், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ். பவானந்தராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## 4 வைத்தியர்களுக்கு கொரோனா தொற்று

அதில், வைத்தியசாலை ஊழியர்கள் 07 பேர், தாதியர்கள் 06 பேரும் அடங்குகின்றனர் என பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

தொற்றுக்குள்ளான 17 பேரும், கொரோனா சிகிச்சை மத்திய நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனவும், இவர்களோடு தொடர்பை பேணியவர்களை சுய தனிமைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும், வைத்தியசாலையில், கொரோனா தொற்று நோயாளர் வார்ட்டில் அதிகளவான தொற்றாளர்கள் சிகிச்சை பெற்று வருவதுடன், வைத்திய சேவை நடவடிக்கை பாதிக்கப்பட்டுள்ளது என வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## உலர்ந்த மஞ்சள் 650 கி.கி மீட்பு

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களும், அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட டிங்கி இயந்திர படகு மற்றும் உலர்ந்த மஞ்சள் என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சின்னப்பாடு சுங்க அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

## சுகாதார துறையில் ஏழுபேர் கொரோனா தொற்றுக்கு மரணம்

சுகாதாரத் துறை ஊழியர்களில் பெரும் எண்ணிக்கையானோருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாகவும் அவர்களில் 7 பேர் உயிரிழந்துள்ளதாகவும் சுகாதார ஊழியர்களின் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்றுவந்த தாதி, அசோகா மல்காந்தி எனும் தாதி இன்று (20) காலை உயிரிழந்தார். இவர், ரந்தவான வைத்தியசாலையில் கடமை புரிந்தவராவார். மூன்று பிள்ளைகளின் தாயான அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்தார். ரந்தவான, விழிம்புல பகுதியைச் சேர்ந்த அவருக்கு 48 வயது.

இதேவேளை, கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்தியரான ராஸிக் மொஹமட் ஜனன், குறித்த வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்தார்.

LK Newspapers Viber Community

# எதற்காக இந்த மாற்றம்?



மகேஸ்வரி விஜயனந்தன்
mayurisaai@gmail.com



கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் வீடுகள் அல்லது வீதிகளில் இறக்கும் காட்சிகளை எவ்வித தணிக்கையுமின்றி, சமூக வலைத்தலங்கள் அல்லது தனியார் தொலைக்காட்சி அலைவரிசைகள் ஊடாக, கடந்த சில வாரங்களாக பார்க்க நேரிட்டுள்ளதென்றால், அதற்கென தனியாக மனத் தைரியமும் திடகாத்திரமும் எமக்கு கண்டிப்பாக தேவையாகவுள்ளது. அல்லது மனதைக் கல்லாக்கிக்கொண்டு, உணர்வுகளை மறுத்துப்போகச் செய்த பின்னர் தான் இவற்றையெல்லாம் பார்க்கவோ, அனுபவிக்கவோ வேண்டும். எவ்வளவு மனவலிமையுடையவராக இருந்தாலும் எமது நாட்டின் பிரதான வைத்தியசாலைகள் உள்ளிட்ட தகனச்சாலைகளில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் பிணக்குவியல்களைப் பார்த்தால் ஒரு கணம் இதயம் ஸ்தம்பித்து விடும்.

பல மாதங்களுக்கு முன்னர் எமது அண்டை நாடான இந்தியாவில் இவ்வாறு கொரோனா பிணக்குவியல்களைப் பார்த்து, அண்டை நாடு தானே என அலட்சியமாக இருந்த எமது கண்முன்னே இன்று, இந்தச் சம்பவங்களைப் பார்க்கும் போது, தொற்றால் இறப்பவர்களை விட, நாம் தான் பெரும் பாவம் செய்தவர்களாக உள்ளோம்.

ஒரு புறம் கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசி ஏற்றும் செயல்பாட்டில் அரசாங்கம் தீவிரமாக இறங்கியுள்ள நிலையில், மறுபுறும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை, கொரோனா மரணங்கள் நிமிடத்துக்கு 3, 4 என பதிவாகி, தகனச்சாலைகள் சடலங்களை எரித்தே, செயழிலந்து. அல்லது அதற்கான எரிவாயு தேவை அதிகரித்துள்ளதால், சடலங்களை டயர்கள் வைத்து எரிப்பதற்கான திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனவே, நாளொன்றுக்கு 200 மரணங்கள் ஏற்படப் போகின்றன. ஆகவே நாட்டை முழுமையாக முடக்குவதைத் தவிர வேறு வழியில்லை என சுகாதார தரப்பினர் உள்ளிட்டவர்கள் பல்வேறு வகைகளில் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து வந்த நிலையில், நாடு இன்று முடக்கப்படுமா அல்லது நாளை முடக்கப்படுமா? என்ற எதிர்பார்ப்புக்கு மத்தியில் தான், கடந்த 16ஆம் திகதி அமைச்சரவை மாற்றம் ஒன்று செய்யப்பட்டது.

2020 ஒகஸ்ட் மாதம் கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் அமைச்சரவையில் 25 அமைச்சர்களும் 39 இராஜாங்க அமைச்சர்களும் பதவிப்பிரமாணம் செய்து கொண்ட ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது ஆண்டு நிறைவிலேயே, முதலாவது அமைச்சரவை மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கு இடைப்பட்ட காலப்பகுதியிலும் புதிய நிதியமைச்சர் உள்ளிட்ட சில இராஜாங்க அமைச்சுகள், அமைச்சு விடயதானங்களில் மாற்றம் என்பன முன்னெடுக்கப்பட்டாலும் கொரோனாவுக்கு மத்தியில் பொருளாதாரம், உயிர் அச்சுறுத்தல், விலையேற்றம், சம்பள முரண்பாடு என கடுமையான சவால்களுக்கு மத்தியில், சவால்களை எதிர்நோக்கியுள்ள அமைச்சுப் பதவிகளிலேயே திடீர் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டை முடக்குவார்கள் என எதிர்பார்த்த மக்களுக்கு காரணமற்ற அமைச்சரவை மாற்றம் ஏமாற்றத்தையே தந்தாலும், காரணத்துடன் தான் அமைச்சரவை மாற்றம் செய்யப்பட்டுள்ளது என தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

அதாவது, இந்த அமைச்சரவை மாற்றமானது முன்னாள் சுகாதார அமைச்சர் பவித்ரா தேவி வன்னியாராச்சியை இலக்காக கொண்டு முன்னெடுக்கப்பட்டுள்ளதென அரசியல் மட்டம் தொடக்கம் சாதாரண மக்கள் வரை உணர்ந்துள்ளனர்.

சுகாதார அமைச்சரை இலக்காகக் கொண்டு அமைச்சரவை மாற்றம் செய்யப்பட்டிருந்தாலும் அம்மாற்றம் கொரோனாவின் கோர தாண்டவத்தின் மத்தியிலா எடுக்கப்பட வேண்டும் என்பதே இன்றைய அங்கலாய்ப்பாக உள்ளது.

சுகாதார அமைச்சரை மாற்றினால் கொரோனாவுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடலாம் என்று சிந்திருந்தால், அந்த மாற்றங்களை ஆரம்பத்திலேயே செய்திருக்கலாம். இன்று நாட்டுக்கு தேவைப்படுவது அமைச்சரவை மாற்றமல்ல. மாறாக கொரோனாவிலிருந்து நாட்டையும் மக்களையும் மீட்பதே இன்றைய அவசியமாகும்.

சுகாதார அமைச்சர் கொரோனா ஒழிப்பு செயற்பாட்டில் தோல்வியடைந்ததை காரணம்காட்டி, அவரது அமைச்சுப் பதவியை மாற்றியிருந்தாலும் கொரோனா ஒழிப்பு தொடர்பான தீர்மானங்களை எடுப்பது கொரோனா ஒழிப்பு செயலணியின் பிரதானி அல்லது தகவல்களை அறிவிக்கும் புலனாய்வு பிரிவின் பிரதானிகளின் பதவிகளையே மாற்றியிருக்க வேண்டும் என்று பலரும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

முன்னாள் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, இலங்கையில் வைத்து முதலாவது தொற்றாளராக அடையாளம் காணப்பட்ட சீனப் பெண் குணமடைந்து வைத்தியசாலையை விட்டு வெளியேறிய போது, அப்பெண்ணை முத்தமிட்டு இலங்கையின் மருத்துவத்தின் பெருமிதத்தை உலகறியச் செய்தமை இலங்கையரான எம் அனைவருக்கும் பெருமையான விடயமாகவே காணப்பட்டது.

ஆனால், இதே முன்னாள் சுகாதார அமைச்சர் தனிப்பட்ட காரணங்களுக்காவோ அல்லது நாட்டு மக்கள் நலனுக்காகவோ சில மதச் சடங்குகளை செய்து, முட்டிகளை களனி கங்கையில் வீசியபோதும், ஏன் கொரோனாவுக்கு சிறந்த மருந்தென தம்மிக பாணியை அருந்தி ஊடகங்களுக்கு காட்சிகொடுத்து பல விமர்சனங்களுக்கு உள்ளான நிலையில் கூட இவரது பதவி ஆட்டம் காணும் என இவரே எதிர்பார்த்திருக்க மாட்டார்.

முக்கியமாக ஜனாதிபதி செயலகத்துக்கு வருமாறு அழைப்பு விடுத்த அன்றே தனது அமைச்சர் பதவியில் மாற்றம் ஏற்பட்டுள்ளதை அறிந்துக்கொண்டுள்ளதாக தற்போதைய கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்தன தெரிவித்திருந்த அதேவேளை, தான் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை இவ்வாறானதொரு மாற்றம் ஏற்படும் என தெரிவித்துள்ள போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, எனினும் வாழ்க்கையில் நடப்பவை எல்லாம் நன்மைக்கே என மனதை தேற்றிக்கொள்வதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், தனது பதவி மாற்றத்தின் ஏமாற்றத்தின் வெளிப்பாடாக சுகாதார அமைச்சிலிருந்து வெளியேறும் முன், நடப்பவை எல்லாம் நன்மைக்கே என்ற உள்குத்துடன் கதையொன்றைக் கூறி அனைவரிடமும் விடைபெற்ற அவரின் கண்ணில் வேதனையைக் காணமுடிந்தது.

இன்றைய அரசாங்கத்தில் நான்குக்கு மேற்பட்டவர்கள் தொழின்முறை சார் வைத்தியர்களாக இருக்கும் நிலையில், குறிப்பாக கொரோனா ஒழிப்பு தொடர்பான இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சுதர்சினி பெர்ணான்டோபுள்ளே போன்றவர்கள் இருக்கும் போது, அவர்களை எல்லாம் விடுத்து, அண்மைக்காலமாக நாக்கில் சனி என்பது போல ஏதோ ஒன்றை யதார்த்தமாக கூறி அதிக விமர்சனங்களுக்கு உள்ளாகி வரும், "கடவுள் தான் இனி கொரோனாவிலிலிருந்து காப்பாற்ற வேண்டும்" என கடவுள் மேல் பொறுப்பை சுமத்திய முன்னாள் ஊடகத்துறை அமைச்சரான கெஹெலிய ரம்புக்வெல சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்டமைக்கு பல தரப்புகளிலிருந்தும் எதிர்ப்புகள் என்பதை விட விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், கொரோனா மரணங்கள் 6,000 கடந்தாலும் கொரோனா ஒழிப்பு தொடர்பான தீர்மானங்களை எடுக்கும் கொரோனா ஒழிப்பு செயலணியின் பிரதானி சவேந்திர சில்வா எவ்வித பிரச்சினையுமின்றி அவரது கடமைகளை முன்னெடுத்துச் செல்லும் நிலையில், சுகாதார அமைச்சு மாற்றத்தில் நியாயமில்லை என்று வாதிடுவோரும் உள்ளனர்.

அரசாங்கம் கொரோனாவின் ஒவ்வொரு அலையிலும் சிறப்பாக செயற்பட்ட வைத்தியர்களான அனில் ஜாசிங்க, பபா பலிகவடன, சுதத் சமரவீர, ஜயருவன் பண்டார, அமல் ஹர்ஸ டி சில்வா, உள்ளிட்டோரை கொரோனா ஒழிப்பு செயற்பாடுகளிலிருந்து விலக்கி, இவர்கள் தமது பொறுப்புகளை நிறைவேற்ற தவறியுள்ளனர் என நாட்டு மக்களுக்கு மறைமுகமாக கூறியிருப்பதைப் போன்றே பின்னணியில் அமைச்சர் பவித்ராவின் பதவி மாற்றமும் இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையில், தற்போது முன்னெடுக்கப்பட்டிருக்கும் அமைச்சரவை மாற்றத்தின் விடயதானங்கள் பகிரப்பட்டுள்ள விடயமானது, அறிவியல் அடிப்படையற்றது என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

'ஆணியே பிடுங்க வேண்டாம்' என்பது போல அமைச்சரவை மாற்றமென்பது தேவையற்ற ஒன்றெனவும் விரைவாக அறிவியல் ரீதியில் விடயதானங்கள் பகிரப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதியால் எந்த நேரத்திலும் எந்த அமைச்சுப் பதவியையும் மாற்றலாம் அல்லது புதிதாக உருவாக்கப்படலாம் என்ற அதிகாரம் அரசியலமைப்பில் வலியுறுத்தப்பட்டாலும் கொரோனா பேரிடர் காலக்கட்டத்தில் இந்த அமைச்சரவை மாற்றங்களை தவிர்த்திருக்கலாம் என்பதே பலரது வாதமாக அமைந்துள்ளது.

அதாவது 'வில்லன்' என்ற தென்னிந்திய தமிழ்திரைப்படம் ஒன்றில் ஓட்டோ ஒன்று ஒழுங்காக ஓடாமையால், அதன் சாரதி ஓட்டோவின் கண்ணாடிகளை திருப்பிய பின் குறித்த ஓட்டோ நன்றாக ஓடியதாக எண்ணுவதைப் போலவே தற்போதைய அமைச்சரவை மாற்றமும் என்ற நகைப்புகளும் நக்கல்களும் குறைவில்லாமல் வெளிவரும் நிலையில் தான், மற்றுமொரு அமைச்சரவை மாற்றம் இடம்பெறவுள்ளதென அமைச்சர் சசீந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் ஒரே மாதிரி முழு காலப்பகுதியிலும் இருக்க வேண்டியது அத்தியாவசியற்றது என்றும் அமைச்சரவையில் அவ்வப்போது மாற்றங்கள் ஏற்படுவது சாதாரண விடயம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களை பலப்படுத்தவே அமைச்சரவையில் மாற்றம் செய்யப்பட்டதே தவிர, பலவீனத்தை மறைப்பதற்காக அல்ல என்றும் தெரிவித்துள்ள அவர், இன்று வரை அரசாங்கம் பலத்துடன் முன்னோக்கி செல்வதாகத் தெரிவித்துள்ளார்.

எனவே, இவ்வாறான அமைச்சரவை மாற்றங்கள் இலங்கையில் பொருளாதாரத்தை பலப்படுத்த அல்லது கொரோனாவுக்கு முற்றுப்புள்ளி வைக்குமாயின், கண்டிப்பாக அதனை வரவேற்கலாம். ஆனால் குரங்கு பிடிக்கப் போய் பிள்ளையார் ஆன கதையாகி விடாமல், அமைச்சர் ஷசிந்திர ராஜபக்ஷ கூறும் அடுத்த அமைச்சரவை மாற்றமும் அறிவியல்பூர்வமாக இடம்பெறுமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.



### கிழக்கு கடலில் தொடரும்

# கடற்கொள்ளை

## சோதனை மேல் சோதனையை அனுபவிக்கும் மீன்பிடித்துறை

நூருல் ஹுதா உமர்





'கடலுக்குள் போனால் பிணம்; வெளியே வந்தால் பணம்' எனும் பழமொழியின் அர்த்தத்தை நம்மில் எத்தனை பேர் அறிந்து வைத்திருக்கிறோம் என்பதுதான் இந்தக் கட்டுரையின் வாசல் கேள்வியாகும்.

மீன்பிடி என்பது இலங்கையின் கிழக்குப் பகுதியில் எப்போதும் முதன்மையான தொழிலாகவே இருந்து வருகிறது. மீன்பிடி தொழிலில் ஈடுபடும் மீன்பிடி வள்ளங்கள், இயந்திரங்கள், வலைகள் அடங்கலாக மொத்தம் 50 - 60 இலட்சம் ரூபாய் பெறுமதியான உபகரணங்கள் தான் கடலில் மிதந்து கொண்டிருப்பது. கடலலையுடன் போராடி, தோணியில் சவலடித்து, காற்றின் திசையறிந்து துடுப்பைச் சுழற்றி, பெரிய இயந்திர படகில் தினமும் மாலையில் கடலுக்கு செல்லும் மீனவர்கள், இரவுமுழுவதும் விழித்திருந்து கடுமையான காற்றுடன் கூடிய காலநிலையை எதிர்கொண்டு, மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்படிக் கஷ்டப்பட்டு பிடிக்கும் மீன்களை நொடிப்பொழுதில் ஒரு திருட்டுக்கும்பல் கொள்ளையடித்து சென்றால் எப்படி இருக்கும்? 2007ஆம் ஆண்டு முதல் கடலில் மீன் திருடும் சம்பவங்கள் நடக்கின்றன. அம்பாறை மாவட்ட ஆழ்கடல் இயந்திரப்படகு மீன்பிடி உரிமையாளர் மீனவர் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் மீராசாஹிப் அப்துல் ஹமீட் (நஸீர்) பின்வருமாறு கூறுகின்றார். "இது விடயமாக, முன்னாள் ஜனாதிபதி முதல் சகல தரப்பினருக்கும் அறிவித்துள்ளோம். இப்போதுள்ள அரசாங்க பிரதானிகள், பாதுகாப்பு படை பிரதானிகள், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம். அதாஉல்லா, எச்.எம்.எம். ஹரீஸ், முஷாரப் முதுனபின் உட்பட பலரிடமும் நேரடியாகச் சந்தித்து, இவ்விடயங்களை பேசினோம். அவர்கள் செய்து தருவதாக கூறியுள்ளார்கள். ஆனால் எதுவும் நடந்த பாடில்லை".

ஒருநாள் கடல் தொழில் செலவாக எரிபொருள் செலவு உட்பட 15-20 ஆயிரம் செலவாகிறது. மீன்பிடி தொழிலில் முதலாளியை தவிர்த்து நால்வர் ஒருநாள் மீன்பிடி தொழிலில் ஈடுபடுகிறார்கள். நித்திரை விழித்து பிள்ளைகளினதும் எங்களினதும் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு கடலில் கஷ்டப்பட்டு பிடிக்கும் மீனை இலகுவாக வந்து சொகுசாக திருடி செல்கிறார்கள். இரவு 11- 12 மணியளவில் 40-45 குதிரைவலு கொண்ட இரண்டு மோட்டார் எஞ்சினை பொருத்திய சிறிய ரக படகை கொண்டு, இந்தச் செயலை செய்து வருகிறார்கள். அதிக எடை கொண்ட கொப்புறு, தளப்பத்து போன்ற விலை கூடிய 100 /150 கிலோ எடைகொண்ட மீன்களை தினமும் திருடும் இவர்கள், அந்த மீன்களை ஆறுதலாக கழட்டிக்கொண்டு நிற்க நேரமில்லாததால் வலையுடன் சேர்த்து அறுத்து கொண்டு செல்கிறார்கள். ஒருநாளில் அவர்கள் பயணிக்கும் அந்த பாதையில் உள்ள 50/60 படகுகளின் வலைகள் இப்படி காவுகொள்ளப்படுகின்றன.

இதனை செய்வது ஒரு படகல்ல 10- 20 படகுகள் இணைந்தே செய்கிறார்கள். இது ஒரு வலையமைப்பின் கீழ் நடைபெறுகிறது. இவர்களை இயக்குபவர்கள் பிரதானமாக ஒரிருவரே. இந்தத் திருட்டு வேலையை கடலில் இறங்கி செய்பவர்களுக்கு உயர் போதை தரும் மதுபானங்கள் வழங்கப்படுகிறது. அதனால் என்ன செய்கிறோம் என்பதை கூட உணர முடியாதவாறு முழு போதையில் தான் அவர்கள் கடலில் இந்த வேலையை செய்கிறார்கள். ஒரு தடவை மீன் களவு போகும் படகு மீன்களை மட்டுமின்றி 20,000 ரூபாய் அளவில் பணத்தையும் இழக்கிறது. அந்த நாள்களின் தொழிலும் இல்லாமலாக்கப்படுகிறது என மீனவர்கள் தமது கண்ணீர் கதையை ஆரம்பிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட களுவாஞ்சிகுடி, செட்டிபாளையம், தேத்தாத்தீவு உட்பட அதை அண்டிய பிரதேசங்களிலையே ஆழ்கடல் மீனவர்களின் மீன்கள் திருட்டு இடம்பெறுகின்றது. இது தொடர்பில் பல முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களிலும், கடற்படை தளங்களிலும், இராணுவ முகாம்களிலும், கடற்தொழில் திணைக்கள அலுவலகங்களிலும் பதிவாகியுள்ளன. ஆனால் நடவடிக்கை எதுவும் திருப்திகரமாக இல்லை. திருடிக்கொண்டு வரும் மீன்களை பாதுகாப்பு தரப்புக்கு முன்னிலையில் பகிரங்கமாகவே விற்கிறார்கள். அவர்களின் படகில் போலியாக எடுத்துக்கொண்டு திரியும் வலைகளுக்கும், அவர்களின் படகுகளில் தினம் காலையில் வரும் மீன்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இருக்காது என்கிறார்கள் மீனவர்கள்.

இந்த மீன் கொள்ளை பிரச்சினையால் 10 நாளைக்கு ஒருதடவை 02 லட்சம் ரூபாய் அளவில் நஷ்டம் ஏற்படுகிறது என்கின்றனர் மீனை பறிகொடுக்கும் மீனவர்கள்.

கல்முனை முதல் அக்கரைப்பற்று வரையான கடற்பகுதிகளில் 350-400 இயந்திரப்படகுகள் அளவில் உள்ளன. இந்தப் இயந்திரப்படகுகளால் நேரடி நன்மையடையும் குடும்பங்கள் 20 ஆயிரம் அளவில் உள்ளன. இந்தக் கடற்கொள்ளையால் ஆழ்கடல் மீனவர்கள், முதலாளிகள், மீன் வியாபாரிகள், இவர்களை நம்பி உதவி செய்தோர் என பல்வேறு தரப்பினரும் நேரடியாக பாதிக்கப்படுகின்றனர்.

மீன்பிடி தொழில் அழியும் நிலையே இப்போது உருவாகியுள்ளது என மீனவர்கள் வருத்தம் தெரிவித்தனர். கடலில் மீன் கொள்ளை, கரையில் விலையேற்றம் என திண்டாடிக்கொண்டிருக்கும் நாங்கள் மரபு விவசாயிகள் போல இன்றைய நாள்களில் தத்தளித்து கொண்டிருக்கிறோம். இந்த நிலை தொடர்ந்து விவசாயமும், மீன்பிடியும் செயலிழந்தால் வளமிக்க எமது நாடு ஏனைய நாடுகளிடம் கையேந்தும் நிலையே வரும்.

மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் காத்தான்குடி பிராந்திய மீன்பிடி சங்க செயலாளர் ஹாஜ் முகம்மத் கருத்து தெரிவிக்கும் போது:

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறத்தாழ 600 ஆழ்கடல் மீன்பிடி படகுகள் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் படகுகளிலிருந்து கடந்த 10-12 வருடகாலமாக அம்பாறை, மட்டக்களப்பு மாவட்ட கடலில் இந்த கொள்ளை சம்பவங்கள் நடந்துகொண்டே இருக்கின்றன. இந்தத் திருடர்களை பிடிக்க தேத்தாத்தீவு மக்களே உதவினார்கள். அந்த மக்கள் அடையாளம் காட்டியதும் அங்கு சென்று பார்த்தோம். அப்போது அங்கு பெரிய மீன்பிடிக்குப் பாவிக்கும் எவ்வித உபகரணங்களும் இருக்கவில்லை. 20-30 மீட்டர் அளவுகொண்ட வலைகளே அவர்களிடம் உள்ளன. அதை வைத்து அவர்களால் பெரிய மீன்களை பிடிக்க முடியாது. எங்களிடமிருக்கும் 50 கட்டு வலையில் 01 கட்டு அளவு கூட அவர்களிடமில்லை. அப்படி இருக்க அவர்களால் எப்படி சாத்தியமானது? 02-2.5 கிலோ மீட்டர் நீளம் கொண்ட எங்களின் வலையில் பிடிபட்டு இருக்கும் மீன்களை வலையோடு அறுத்துக்கொண்டு செல்கிறார்கள் என்றார்.

கொள்ளைக்காக ஒரு படகுடன் ஆரம்பித்த இந்த கும்பல் இப்போது 10 சிறிய இயந்திரப்படகுகளை கொண்டு கொள்ளையில் ஈடுபட்டு வருவதாகவும் தடித்த உயர்ந்த தோற்றத்தை உடையவர்களே இந்த செயலில் ஈடுபட்டு வருவதாகவும் கறுத்த துணியால் முகத்தை மூடியுள்ளார்கள் என்கின்றனர் கொள்ளை சம்பவத்தை அனுபவித்த மீனவர்கள்.

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட அழகிய இலங்கை தீவு மக்கள் தகர ரின்களில் அடைக்கப்பட்ட மீன்களை இறக்குமதி செய்து உண்ணும் காலம் கனிந்து வருகிறது. ஆரோக்கியமான மீன்களை இலங்கையர்கள் உண்ண முடியாத சூழ்நிலை இலங்கையில் இப்போதைய நாள்களில் உருவாகி வருகிறது.

பல இலட்சங்களை கடலில் போட்டுவிட்டு பெரிய குழப்பத்துடன் தினமும் கடலுணவை வழங்கும் மீனவர்களாகிய எங்களின் பிரச்சினைகள் நீளாது விரைவாக முடிக்கப்படல் வேண்டும். தினமும் கடலை நம்பி வாழும் எங்களுக்கும், எங்கள் குடும்பத்தினருக்கும் நிம்மதியான ஒரு வாழ்வை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். சுமூகமான முறையில் எங்களது தொழிலை செய்ய இலங்கை அரசாங்கம் வழிசமைக்க வேண்டும். இந்த கடற்கொள்ளையர்கள் உடனடியாக கைது செய்யப்பட்டு எங்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட வேண்டும்.

LK Newspapers Virtual Community Library

# கிழக்கு முதலமைச்சால் அஸிஸுக்கு பாராட்டு

**சிறந்த தலைமைத்துவம், நேர்மை, மனிதாபிமானம் ஆகிய பண்புகள் தவறாமல் பணியாற்றி ஓய்வு**

பைஷல் இஸ்மாயில்





கிழக்கு மாகாண உள்ளூராட்சி, கிராம அபிவிருத்தி, கிராமிய தொழிற்துறை, சட்டமும் ஒழுங்கும், நிதி, போக்குவரத்து, சுற்றுலாத்துறை, கட்டடங்கள் மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய தேசமான்ய யூ.எல்.ஏ.அஸீஸ் தனது 37 வருட அரச சேவையிலிருந்து 2021.08.11 ஆம் திகதி ஓய்வுபெற்றார்.

சிறந்த தலைமைத்துவம், நேர்மை, மனிதாபிமானம், எளிமை போன்ற பல உயர் பண்புகளைக் கொண்டவராக, இலங்கை நிர்வாக சேவையில் மூன்று தசாப்தங்களைக் கடந்து நிறைவு செய்துள்ளார்.

சமூக சேவையில் அதிக ஈடுபாடு கொண்ட அஸீஸ், 1984 ஆம் ஆண்டு 'அட்டாளைச்சேனை கல்வி வட்டம்' சமூகசேவை அமைப்பை ஆரம்பித்து, வெற்றிகரமாக வழிநடத்துவதில் வெற்றி கண்டு, அட்டாளைச்சேனை பிரதேச மாணவர்களுக்கு மேலதிக மாலை நேர வகுப்புகளை இலவசமாக நடத்துவதில் தீவிரமாகத் தொழிற்பட்டார். இதனால் ஏழை மாணவர்கள் பெரிதும் நன்மையடைந்தனர். அட்டாளைச்சேனை சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழகம் ஊடாகவும் அவரது சமூகப் பணிகள் தொடர்ந்து கொண்டு செல்கின்றன.

தேசமான்ய யூ.எல்.ஏ. அஸீஸ் இலங்கை நிர்வாக சேவையில் 30 வருடங்கள் நிறைவு செய்ததையொட்டி, கிழக்கு மாகாணத்தில் பல பாராட்டு விழாக்களை பல அமைப்புகள் நடத்தியிருந்தன. குறிப்பாக, கிழக்கு மாகாண உள்ளூராட்சி, கிராம அபிவிருத்தி, கிராமிய தொழிற்துறை, சட்டமும் ஒழுங்கும், நிதி, போக்குவரத்து, சுற்றுலாத்துறை, கட்டடங்கள் மற்றும் வீடமைப்பு முதலமைச்சின் பிரதம கணக்காளர் எம்.ஐ.எம். முஸ்தபா தலைமையில் அமைச்சின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் உள்ளிட்டோர்களால் யூ.எல்.ஏ.அஸீஸ் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

உதுமாலெவ்வை - ஹதீஜா உம்மா தம்பதியினருக்கு மகனாகப் பிறந்த அஸீஸ், அட்டாளைச்சேனை அல்-முனீறா வித்தியாலயம், அட்டாளைச்சேனை மத்திய கல்லூரி என்பனவற்றில் கல்விகற்று பேராதனை பல்கலைக்கழக கலை (சிறப்பு) பட்டதாரியானார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் சர்வதேச உறவுகள் துறையிலும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் பொதுத்துறை நிர்வாகத்திலும் முதுமாணி பட்டங்களைப் பெற்றுள்ளார்.

சுமார் 06 வருடங்கள் ஆசிரியராகப் பணியாற்றிய அஸீஸ், 1990 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவையில் நியமனம் பெற்று, 1990 - 1993 ஆம் ஆண்டு வரை புத்தளத்திலும், 1993 - 2005 வரையான காலப்பகுதியில் தான் பிறந்த ஊரான அட்டாளைச்சேனையில் பிரதேச செயலாளராகவும் பணியாற்றினார்.

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் விசேட ஆணையாளராக 08 வருடங்கள் கடமையாற்றிய அவர், 2005 - 2009 வரை அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகவும் பணியாற்றியுள்ளார்.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக 2009 ஆம் ஆண்டு நியமனம் பெற்று 2012 வரை பணியாற்றினார். அதே ஆண்டு கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளராக நியமனம் பெற்ற அவர் 2021 ஓகஸ்ட் 11 வரை பணியாற்றி தனது ஓய்வை அடைந்தார்.

இவரது சேவைக்காலத்தில் புலமைப்பரிசில் பெற்று ஜேர்மனி, தாய்லாந்து, அவுஸ்திரேலியா, தென்கொரியா, கம்போடியா, இந்தியா, சிங்கப்பூர், ஹொங்ஹொங் போன்ற நாடுகளுக்கும் சென்றுள்ளார். அரச துறையில் அர்ப்பணிப்புடன் ஆற்றிய பணிகளுக்காக, மக்கள் தொண்டன், அகில இலங்கை சமாதான நீதவான், சாமசிறி, தேசமான்ய, சமூகசேவை சிரோண்மணி, தியாக தீபம் போன்ற பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.


# ஒரு போதும் நம்பவேண்டாம்

**கொரோனா தொற்று ஏற்பட்டவர் அந்த நாளில் இருந்து 28 நாளின் பின்னரே தடுப்பூசியைப் பெறவேண்டும்.**

**ஒக்டோபரில் கொவிட்-19 தாக்கம் உச்சத்தை அடையும். அதனால், மரணங்களும் அதிகரிக்கும்.**

**கொவிட்-19 தடுப்பூசிகளைச் செலுத்திக் கொண்டவர்கள் இரண்டு நாள்கள் ஓய்வெடுத்த பின்னரே, தொழிலுக்குச் செல்ல வேண்டும்.**

ஹஸ்பர் ஏ. ஹலீம்



கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கு தடுப்பூசி செலுத்துவதே சிறந்த தீர்வாகும். எனினும், தடுப்பூசி தொடர்பில் சமயத் தலைவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் போலி பிரசாரங்களை ஒருபோதும் நம்ப வேண்டாம். அதில் எந்தவித உண்மையும் இல்லை. சமயத் தலைவர்கள் யாராவது தடுப்பூசி தொடர்பி ல் பிழையான விடயத்தைக் கூறினால், அவர்களை நேரடியாக எதிர்ப்பது நல்லதல்ல; மாறாக, அந்தப் பிழையான விடயத்தை வெளிக்கொண்டு வந்து, வைத்திய நிபுணர்கள் மூலம் சரியான விடயத்தை மக்களுக்குக் கொண்டு செல்ல வேண்டும். இவ்வாறு தொடர்ச்சியாக உண்மையை வெளிப்படுத்தும் போது, நிச்சயம் தப்பபிப்பிராயங்களைப் போக்கலாம் என்று கூறுகின்றார் பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டு செயற்படும் பொது வைத்திய நிபுணரான டொக்டர் கமால் அப்துல் நாசர். அவர், கொவிட் - 19 பெருந்தொற்றுநோய், பரவல் ஆகியன தொடர்பாகவும் தடுப்பூசி தொடர்பாகவும் டொக்டர் கமால் அப்துல் நாசர் பின்வரும் கருத்துகளை முன்வைத்திருந்தார்.

கொவிட்-19 தடுப்பூசியை செலுத்திக் கொண்டால் குழந்தை கிடைக்காது என்ற பிரசாரமொன்று, தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது. இது முற்றிலும் பொய்யானதாகும். கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார் இந்தத் தடுப்பூசியைச் செலுத்த முடியும். அதில் எந்தப் பிரச்சினையும் வரமாட்டாது.

கொவிட்-19 தொடர்பில் பேஸ்புக், வட்ஸ்அப் போன்றவற்றில் வரும் தகவல்கள் அனைத்தையும் நம்ப வேண்டாம். அது தொடர்பில் வைத்திய நிபுணர்களை அணுகி தெளிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

தடுப்பூசி ஊடாக நோயின் தாக்கத்தைக் குறைத்து, மரணங்களின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும். அமெரிக்காவால் கொவிட் - 19க்கு எதிராக தயாரிக்கப்பட்ட பைசர், மொடோனா தடுப்பூசிகள் 92 சதவீதமான பாதுகாப்பை வழங்குகின்றன.

இலங்கையில் அதிகம் செலுத்தப்படும் சீனாவின் தயாரிப்பான சைனோபாம் தடுப்பூசியும் கொவிட் - 19 இல் இருந்து பாதுகாப்பைத் தருகின்றது. இதனால் தாமதிக்காமல் ஏதாவதொரு தடுப்பூசியையும் உடனடியாகச் செலுத்திக் கொள்வதே சிறந்ததாகும்.

இன்னுமொரு தடுப்பூசி வரும் வரை பொறுமையாக இருக்க வேண்டாம். தடுப்பூசிகளிடையே அதன் திறனில் வித்தியாசம் காணப்படலாம். எனினும் ஏதாவதொரு தடுப்பூசியை பெறுவதே சிறந்ததாகும்.

தடுப்பூசியேற்றல் நடவடிக்கையின் போது, கட்டாயம் சமூக இடைவெளியைப் பேண வேண்டும். இலங்கையில் தடுப்பூசி வழங்கப்படும் இடங்களில் சமூக இடைவெளியைக் காண முடியவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

சமூக இடைவெளி பேணாது தடுப்பூசி பெறும்போது, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாக வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. இன்று சிலர், தடுப்பூசி செலுத்தியதால் கொவிட்-19 தொற்று ஏற்படுவதாக பிழையான கருத்துகளைப் பரப்புகின்றனர். இது தவறானதாகும். தடுப்பூசிகள் மூலம் வைரஸ் பரவாது.

மாறாக, தடுப்பூசி செலுத்தப்படும் இடங்களில் மக்கள் உரிய சுகாதார வழிமுறைகளைப் பேணாததன் காரணமாகவே, தொற்று ஏற்பட அதிகம் வாய்ப்புண்டு. இதனை அறியாமல் தடுப்பூசி செலுத்தியதன் பின்னரும் கொரோனா தொற்றியுள்ளதாகப் பிழையான தகவல்களை பரப்புகின்றனர்.

முதலாவது, இரண்டாவது டோஸ்களை பெற்று, இரு கிழமைக்குப் பின்னரே நோய் எதிர்ப்பு சக்தி உடம்பில் அதிகரிக்கின்றது. முதலாவது டோஸ் எடுத்து நான்கு கிழமைக்குப் பின்னர் இரண்டாவது டோஸ் எடுப்பது சிறந்தது. இதன் மூலமாக நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கப் பெறுகிறது.

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டவர் அந்த நாளில் இருந்து 28 நாள்களின் பின்னரே தடுப்பூசியைப் பெறுவது சிறந்ததாகும். இந்த நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக அதிகம் அதிகம் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். இதற்காக பி.சி.ஆர். அன்டிஜன் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு பொதுமக்கள் முன்வர வேண்டும்.

அண்மையில் சீனாவின் வூகான் நகரில் கொவிட்-19 நோய் மீண்டும் பரவியதாக தெரிவிக்கப்பட்டதை அடுத்து, சுமார் ஒரு மில்லியன் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, இதன் தாக்கம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் தற்போதைய நிலையை ஒப்பீடுகளையில், எதிர்வரும் ஒக்டோபர் மாதம் கொவிட்-19 தாக்கம் உச்சத்தை அடையக்கூடிய வாய்ப்புள்ளது. இதனால் அந்தக் கால கட்டத்தில் கொவிட்-19 மரணங்கள் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

மூக்கு வடிதல், இருமல் போன்றன' டெல்டா' வைரஸ் தொற்றாளர்களுக்கான அறிகுறிகளாகக் காணப்படுகின்றன. இவ்வாறு அறிகுறிகள் தென்பட்டால், உடனடியாகப் பரிசோதனைகளை மேற்கொள்வது சிறந்ததாகும்.

கொவிட்-19 தடுப்பூசிகளைச் செலுத்திக் கொண்டவர்கள் இரரண்டு நாள்கள் ஓய்வெடுத்த பின்னரே, தொழிலுக்குச் செல்வது சிறந்ததாகும். ஏனென்றால், சிலருக்கு 24 மணி நேரத்தின் பின்னர் உடம்பு வலி, காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. எனினும், இது 48 மணி நேரத்துக்குள் மறைந்து விடும்.

'தடுப்பூசிகளினால் தான் கொரோனா வைரஸ் உருமாறி மீண்டும் வருகின்றது: நோபல் பரிசு விஞ்ஞானி டொக்டர் லூக் அதிர்ச்சி தகவல்' எனும் செய்தியொன்று தற்போது சமூக ஊடகங்களில் பரவி வருகின்றது.

இது முற்றிலும் பொய்யானதாகும். பிரான்ஸ் விஞ்ஞானி ஒருவரை அடிப்படையாக வைத்து, பிரேஞ் மொழியில் வெளியான செய்தியின் ஆங்கில மொழி பெயர்ப்பு தமிழ் மொழிக்கு மாற்றப்பட்டுள்ளது. ஆங்கில மொழியில் இடம்பெற்ற பிழையாலேயே அது தமிழ் மொழிபெயர்ப்பிலும் பிழையாகக் கூறப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் தடுப்பூசி செலுத்தியவர்களிடம் வைரஸ் ஒருபோதும் உருமாற்றம் பெறாது. தடுப்பூசி தயாரிக்கப்படுவதற்கு முன்னரே இந்த வைரஸ், இங்கிலாந்து, தென்னாபிரிக்க, இந்தியா போன்ற நாடுகளில் உருமாற்றம் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். தடுப்பூசி காரணமாக இந்த உருமாற்றங்கள் ஏற்படுவதில்லை என்பது முக்கிய விடயமாகும்.

இது போன்று சமூக ஊடகங்களில் வெளியாகும் உண்மைக்குப் புறம்பான விடயங்களை நம்புவதைத் தவிர்த்து, நாட்டிலுள்ள அனைத்து மக்களும் எவ்வளவு வேகமாக தடுப்பூசி செலுத்த முடியுமோ அந்தளவுக்குத் தடுப்பூசிகளை செலுத்தி, கொவிட் - 19 இனை முறியடிக்க முன்வர வேண்டும்.

(இக்கட்டுரை, சுகாதார அறிக்கையிடல் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு நடத்தப்பட்ட இணையவழி செயலமர்வு சனிக்கிழமை (14) நடைபெற்றது. இச்செயலமர்வில், வளவாளராகக் கலந்துகொண்ட பொது வைத்திய நிபுணரான டொக்டர் கமால் அப்துல் நாசர், முன்வைத்த கருத்துகளின் தொகுப்பாக அமைந்துள்ளது.)

# பார்வோ வைரஸ்

**நாய்களுக்குப் பரவும்.**

**நீர் பருகக் கொடுக்க வேண்டாம்.**

**வாந்தி, வயிற்றுப்போக்கு, காய்ச்சல் குணங்குறிகள்.**

வி.ரி. சகாதேவராஜா









கல்முனைப் பிராந்தியத்தில் அண்மைக் காலமாக நாய்க் குட்டிகளுக்கு ஒருவகை 'பார்வோ' வைரஸ் என்ற நோய் மிகத் தீவிரமாகப் பரவிவருகிறது. குறிப்பாக, வக்சீன் ஏற்றப்படாத வளர்ப்பு குட்டி நாய்களுக்கே, இப் 'பார்வோ' வைரஸ் என்ற நோய் படுவேகமாகப் பரவிவருகிறது.

உரியவேளைக்கு கால்நடை வைத்தியரிடம் க் கொண்டுசென்று முறையான சிகிச்சையைப் பெறும் நாய்க் குட்டிகள் பிழைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. அவைகளுக்குத் தேவையான 'சேலைன்' மற்றும் 'நுண்ணுயிர்கொல்லி' மருந்தும் வழங்கப்படுகின்றன. அதேவேளை, முறையான வைத்தியப் பராமரிப்பு இன்றி சில நாய்கள் இறந்துவருகின்றன.

இதுதொடர்பாக, கல்முனையிலுள்ள கால்நடை வைத்திய நிபுணர் டொக்டர் பி. மயூரனிடம் இந்த நோய் தொடர்பாக விவரிக்கையில் கூறியதாவது:

'பார்வோ' என்பது ஒரு தொற்று 'டிஎன்ஏ' வைரஸ் ஆகும். இது பொதுவாக, இளம் மற்றும் தடுப்பூசி போடப்படாத நாய்களில் கடுமையான நோயை ஏற்படுத்துகிறது. இது முதன்மையாக, உடலின் வேகமாகப் பிரியும் உயிரணுக்களைப் பாதிக்கிறது. அதாவது, குடல் பாதையையும் எலும்பு மச்சையையும் மிக மோசமாக பாதிக்கிறது.

நாய்க் குட்டிகள் மற்றும் இளம் பருவ நாய்களில் பர்வோ வைரஸ் மிகவும் பொதுவானது என்றாலும், அது வயது வந்த அல்லது வயது மூத்த நாய்களைப் பாதிக்கலாம். குறிப்பாக, அவை தடுப்பூசி போடப்படாவிட்டால் அவற்றுக்கு இந்த நோய் வரும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

வீட்டில் செல்லப்பிராணியாக வளர்க்கப்படும் நாய்க்கு, முழுமையான தடுப்பூசியாகக் கருதப்படுவதற்கு ஒரு வயதில் பூஸ்டர் தடுப்பூசி பெற வேண்டும். நாய்கள் வாழ்நாள் முழுவதும் ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் தடுப்பூசிகளைப் பெற வேண்டும்.

பொதுவாக 'பார்வோ' வைரஸ் என்ற ஒருவகை நோய் இக்காலப்பகுதியில் வக்சீன் ஏற்றப்படாத குட்டிநாய்களுக்கு ஏற்படுவது வழமையாகும். உண்மையில் நாய்களுக்கு 42 நாள்களில் முதலாவது வக்சீன் ஏற்றப்பட வேண்டும்.

வளர்ப்பாளர்கள் நாய்களிடையே வாந்தி, வயிற்றுப்போக்கு, காய்ச்சல் போன்ற குணங்குறிகளைக் கண்டவுடன் உடனடியாக வைத்தியரிடம் கொண்டுசெல்ல வேண்டும்.

இப்படி நோய் அறிகுறிகளைக்காட்டும் நாய்க் குட்டிகள், உணவு உட்கொள்ளாமல் வாந்திஎடுத்த வண்ணமிருக்கும். அவைகளுக்கு எந்தக் காரணம் கொண்டும் தண்ணீர் பருகக்கொடுக்கக்கூடாது.

ஐஸ்கட்டியை மட்டும் அரைமணி நேரத்துக்கு ஒருதடவை தேன் தடவிக் கொடுத்தல் நலம். எவ்வாறாயினும், உடனடியாக வைத்தியரை நாடிச்சிகிச்சை பெறுவதுதான் சிறந்தது.

இதைத் தடுப்பதற்கான ஒரேவழி வக்சீன் ஏற்றுவதுதான். ஆனால், பார்வோ நோயிருக்கும்போது வக்சீன் ஏற்ற முடியாது. கொரோனா போலத்தான் இதுவும்.

இப்பிராந்தியத்தில், குறிப்பாக காரைதீவில்தான் இந்நோய் ஆரம்பமாகியது. தொடர்ந்து ஏனைய பிரதேசங்களுக்கும் பரவிவருகிறது. எது எப்படியிருப்பினும், உரியவேளையில் வைத்திய சிகிச்சையைப் பெற்றால் நாய்க் குட்டிகளைக் காப்பாற்றலாம் என டொக்டர் பி மயூரன் விளக்கினார்.

LK Newspapers Viber Community



# தேயிலை தேசத்து ராணி

துராஞ்சலி ஹரிஹரன்

குழக்க மறந்த தேநீர் குவளை
ஒருபுறமிருக்க,

கூட்டிய வாசல் பாதியில்
நின்றிருக்க,

அணிய மறந்த செருப்பும் கதவோரம்
காத்திருக்க,

பாவம்...!

அணிய மறந்தாளோ? அல்லது,

அடுத்த பொங்கல் வரை
வேண்டுமே என்று

அணிய மறுத்தாளோ?

என் தேயிலை தேசத்து ராணி.....

பெருந்தோட்ட பகுதி பெண்களின் பிம்பம் நிழலாடுகிறது இவ்வரிகளில். 'பெண்' என்பவள் எப்போதுமே போற்றப்பட வேண்டியவள்தான். பிறப்பின் மகத்துவத்தை உணர்த்த அவள் ஏற்க வேண்டிய பாத்திரங்களோ ஏராளம். தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அரசியல் அரங்கில் பெண்களின் அங்கத்துவம் பற்றி பேசப்பட்டுக் கொண்டிருக்கும் இக்காலத்தில் அடிப்படை தேவைகளை கூட பூர்த்தி செய்ய முடியாமல் வாழும் மலையக பெண்களைப்பற்றி பேச வேண்டியது கட்டாயம்.

பெருந்தோட்ட பகுதிகளில் வாழ்க்கைக்காக ஆயிரம் போராட்டங்கள். ஆனால் அதற்கும் அப்பாற்பட்டு மலையக பெண்களின் நாளாந்த வாழ்க்கைப் போராட்டம் சவால்கள் நிறைந்தவை. அந்தச் சவால்கள், அவர்களது சிறுவயது முதலே தொடங்கி விடுகின்றன.

பெண் பிள்ளைகளுக்கு இளமையில் ஏற்படும் போசனைக் குறைபாடானது அவர்களின் வாழ்நாள் முழுவதிலும் தாக்கத்தை செலுத்தி விடுகின்றது. பெரும்பாலும் கோதுமை ரொட்டியும் அரிசிச் சோறுமே மலையகப் பகுதிகளில் பிரதான உணவாகும். நிறையுணவில் காணப்படும் சத்துகள் இவ் உணவுகளில் மட்டுமே கிடைத்து விடுவதில்லை.

பூப்பெய்தும் காலத்தில் கிடைக்க வேண்டிய முறையான போஷணையும் பெண் பிள்ளைகளுக்கு கிடைப்பதில்லை. கர்ப்பிணி தாய்மார்களுக்கு வெறுமனே திரிபோசா தவிர்ந்து, அவர்கள் நாளொன்றுக்கு உட்கொள்ளும் வேளை உணவுகளில் எந்த மாற்றமும் இல்லை என்பதால், கிடைக்கும் போஷணையின் அளவும் குறைவடைகின்றது . போஷணை மட்டம் தொடர்பான போதிய தெளிவு மலையகத்தில் இல்லை என்றாலும் வறுமையே அதற்கான பிரதான காரணம் ஆகும்.

கர்ப்பிணித் தாய்மார்களின் மகப்பேற்று காலத்திலும் பிரசவத்தின் பின்னரும், தேவையான மருத்துவ வசதிகளைப் பெறுவதில் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். தூரப் பிரதேச வைத்தியசாலையை நாடிச்செல்ல வேண்டிய நிலை உள்ளதாலும், அதிக பிரதேசங்களில் ஆம்பியுலன்ஸ் பெற்றுக் கொள்வது கடினமான உள்ளதாலும் சிரமங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

தோட்டத்திலுள்ள லொறிகளில் பிரசவத்தின் போதும் அவசர தேவைகளின் போதும் நோயாளிகள் கொண்டு செல்லப்படுவது இன்றளவும் மாறாமலேயே இருக்கிறது. இக்காரணிகள் தாய்-சேய் நலன்களிலும் பாரிய ஆபத்தை ஏற்படுத்தி விடுகின்றன.

மகப்பேற்று தாதியரிடமிருந்தும் குடும்பநல உத்தியோகத்தர்களிடம் இருந்தும் குடும்பத் திட்டமிடல், மகளிர் சுகாதார சேவைகள் தொடர்பான ஆலோசனைகளை பெறும் போது, புதிதாக மொழிப் பிரச்சினைக்கும் மக்கள் முகம்கொடுக்க வேண்டியுள்ளது. இது தொடர்பான ஐயத்தால், அவர்களாகவே ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும் தவிர்த்துவிடுகின்றனர்.

கர்ப்பகால போஷணைக் குறைபாடானது குறைநிறையுடைய குழந்தைகள் பிறக்க காரணமாகின்றது. போக்குவரத்து மற்றும் வைத்திய சேவை குறைபாடுகள் சிசு, தாய் மரணம் வீதத்திலும் அதிகரிப்பை ஏற்படுத்திவிடுகின்றன.

தோட்டப் பகுதிகளில் வேலை செய்யும் பெண்களுக்கு, வேலை நேரங்களில் பயன்படுத்துவதற்கான மலசலகூட வசதிகள் இல்லை. மேலும், மாதவிடாய் காலங்களில் பெரிதும் உடல், உள ரீதியான சிரமங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமை உள்ளது. ஒப்பீட்டளவில், மாதவிடாய் தொடர்பான விழிப்புணர்வு மலையகப் பெண்களிடம் குறைவாகவே காணப்படுகின்றது.

மலையகத்தில் மட்டுமல்லாது, இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் பெரும்பாலான பெண்களுக்கு, மாதவிடாய் காலத்தில் பயன்படுத்தக்கூடிய 'துவாய்'கள் ஓர் ஆடம்பர பொருளேயாகும். அவர்கள் பெரும்பாலும் பழைய துணிகளையே இன்றும் பயன்படுத்துகின்றனர். தனிநபர் சுகாதாரம் தொடர்பாகச் சற்றும் சிந்திக்காது, அநாவசியமானதொரு செலவாகவே அதை அவர்கள் கருதுகிறார்கள். ஏனென்றால், மலையகப் பெண்கள் தனது வருமானத்தில் 3.5 சதவீதத்தை மாதமொன்றுக்கான துவாய்க்காக செலவிட வேண்டி உள்ளது. அவர்களின் வருமானத்துடன் ஒப்பிடுகையில் இது ஓர் ஆடம்பரச் செலவேயாகும்.

பெண்கள் மாதவிடாய் மற்றும் மகப்பேற்று காலங்களில் சுகாதார பழக்கவழக்கங்களை முறையாக பின்பற்றாமையால் இலங்கையில் இரண்டாவதாக பெண்களை அதிகம் பாதிக்கும் கர்ப்பப்பைவாய் புற்று நோய்க்கும் ஆளாக வேண்டியுள்ளது.

வருமானமின்மை காரணமாக, மலையகப் பெண்கள் வெளிநாடுகளுக்கு பணிப்பெண்களாகச் செல்ல வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. குடும்பத்தைப் பிரிந்து, வெறும் பணத்தேவைக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் அவர்கள் அடையும்வேதனைகளோ ஏராளம். பாலியல் மற்றும் உடல் ரீதியாக அவர்கள் அனுபவிக்கும் துன்பங்கள் என்றுமே மாறாத வடுக்கள்.

பெண் பிள்ளைகளும் கல்வியை இடைவிட்டு, நகர்ப் பகுதிகளுக்கு வேலைக்காகச் செல்வதும் பின்னர் தமது சுய பாதுகாப்பைக்கூட உறுதி செய்ய முடியாமல் முடிவெடுப்பதிலும் பக்குவம் இல்லாமல் இறுதியில் தற்கொலை செய்து கொள்ளும் போது, எந்த மாதிரியான சமூகத்தில் நாம் வாழ்கிறோம் என்ற வெறுப்பே மிஞ்சுகிறது. சமூகம் தாண்டி, மிகச்சிறிய அமைப்பான குடும்பத்துக்குள்ளாவது பெண்கள் நிம்மதியாக வாழ்கிறார்களா என்று பார்த்தால், அந்தக் கேள்வியும் கேட்கக்கூடாத கேள்வாகவே நோக்கப்படுகின்றது.

மலையக ஆண்களின் மதுப்பாவனையானது, இறுதியில் வீட்டு வன்முறையை ஏற்படுத்தி விடுகிறது. அதில் பாதிக்கப்படுவதும் பெண்கள் தான். வறுமைக்கு மத்தியில் குடும்பத்தை கொண்டு செல்ல வேண்டிய தேவையோடு வீட்டு வன்முறையையும் சகித்துக் கொள்ள வேண்டிய நிலையாலும் சமூகம், கலாசாரம், பண்பாடு என்று காரணங்களால், பெண்கள் வீட்டு வன்முறைகளுக்கு எதிராக வாய்திறப்பதே இல்லை.

பாதுகாப்பு, சுகாதாரம், பொருளாதாரம், மருத்துவம் போன்ற அத்தியாவசிய காரணிகளில் ஏற்படும் குறைவானது, பெண்களின் வாழ்க்கையில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தி விடுகின்றது.

உளவியல் ரீதியான மற்றும் கலாச்சார ரீதியான மாற்றத்தை குடும்ப வன்முறை ஏற்படுத்தி விடுகின்றது. இவ்விளைவுகள் ஒரு பூரணமான சமூகத்தின் போக்கிலும் தாக்கத்தை செலுத்தும் என்பதில் ஐயமில்லை.

வெறுமனே உழைக்கும் இயந்திரங்கள் அல்ல பெண்கள்; உணர்வுகளாலும் உரிமைகளாலும் என்றுமே பூரணத்துவத்தை அடைய வேண்டியவர்கள். கல்வியிலும் அரசியலிலும் பெண்கள் பிரகாசிக்க வேண்டியது எவ்வளவு முக்கியமோ அதுபோன்றே அடிப்படை உடல், உள, சுகாதார தேவைகளை அவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டியதும் முக்கியமானது.

குடும்பத்தை உருவாக்கி சமூகத்துடன் ஒருங்கிணைந்து நாட்டினது பொருளாதாரத்துக்குப் பங்களிப்பு செய்யும் பெருந்தோட்ட பெண்களின் தேவை என்னவோ சொற்பமே!..

குடும்பம் என்ற ரீதியில் ஆணும், அவளது சமூகமும், பொருளாதார ரீதியில் நிர்வாகமும் தன்னை சுற்றியுள்ள எல்லா பெண்களினதும் தேவைகள் பற்றி அக்கறை காட்ட வேண்டியது அவசியம். சமூகமும் பிரதேசமும் அமைவிடமும் மாறுபடலாம்.

ஆனால், எல்லா பெண்களுக்கும் தேவையென்பது சமமானதே.. எங்கு அடிப்படை தேவைகள் பூர்த்திசெய்யப்படுகின்றதோ அங்குதான் எதிர்காலம் பற்றிய சிந்தனையும் மற்றைய சமூகங்களோடு போட்டி போடக்கூடிய வல்லமையும் பிறக்கிறது.

# ஒட்டுசுட்டான் மண்ணை எடுத்து

## அதிகரிக்கும் மட்பாண்டப் பயன்பாடு; மண் இல்லாமல் தவிக்கும் உற்பத்தியாளர்

சுப்பிரமணியம் பாஸ்கரன்

நவீன உலக மாற்றத்தின் புதிய புதிய வருகையால், மட்பாண்டங்களின் உற்பத்தியும் பயன்பாடுகளும் அருகி வந்தாலும் தற்போதும் பல இடங்களில் இத்தொழில்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மட்பாண்டப் பொருட்களை இன்றும் பலர் விருப்பத்துடன் பயன் படுத்தி வருகின்றனர். காரணம், இவை மருத்துவ குணம் நிறைந்தவையாகக் கானப்படுகின்றன. இதனால், இன்றைய சூழலில் மட்பாண்டப் பொருட்களின் பயன்பாடு மெல்ல மெல்ல அதிகரித்து வருகின்றது என்பது நிதர்சனமான உண்மையாகும்.

அலுமினிய பாத்திரத்தில் சமைப்பதன் மூலம் பல நோய்த் தாக்கங்கள் ஏற்படுகின்றது என்பதால் தற்பொழுது இப்பொருட்களுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது

இந்த தொழிலை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்ற மட்பாண்ட உற்பத்தியாளர்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான உற்பத்திகளை பிரதான வாழ்வாதாரமாக நம்பி வாழ்ந்து வரும் நிலையில் மண்பாண்ட உற்பத்திகளை செய்ய முடியாத நிலையும், உரிய விலைக்கு விற்பனை செய்யமுடியாத நிலையும் அதற்கான மூலப் பொருளான களிமண் பெற முடியாத நிலையும் தற்பொழுது ஏற்பட்டுள்ளதாக உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

உற்பத்திக்கான மூலப் பொருளான களி மண் பெற்றுக் கொள்ளுதல், சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்துதல், நவீன முறையிலான தொழில்நுட்ப வசதிகள் இல்லாத நிலை என பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன.

மட்பாண்ட உற்பத்தியில் ஈடுபடுகின்ற பலரை சந்தித்தபோது, அவர்கள் முன் வைத்திருக்கின்ற கோரிக்கையானது மட்பாண்ட உற்பத்திக்கு தேவையான களிமண் பெற்றுக் கொள்வதென்பது பாரிய பிரச்சினையாக இருப்பதாகவும் இந்த பிரச்சினைக்கான தீர்வை காண்பதற்கு துறை சார்ந்த அதிகாரிகள் எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுப்பதில்லை என்றும் பேச்சளவிலேயே அவர்களுடைய கருத்துகள் இருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்

மனித இனம் தோன்றிய மிகப் பழங்காலத்திலேயே மட்பாண்டங்களைச் செய்யும் நுட்பங்கள் கண்டறியப்பட்டன. மட்பாண்ட உற்பத்தியானது உலகின் பல பகுதிகளிலும் மிகவும் பழைமை வாய்ந்த தொழிலாக இருந்து வருகிறது.

களி மண்ணை வேண்டிய உருவத்தில் செய்து, அதனை சூளையில் அடுக்கி, உயர்ந்த வெப்பநிலைக்குச் சூடாக்கி மட்பாண்டங்கள் உருவாக்கப் படுகின்றன.

உலகில் மனித நாகரீகம் தோற்றம் பெற்ற காலத்தில் இருந்து பயன்படுத்தப்பட்டு வந்த மட்பாண்ட ஓடுகள் மூவாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக தொல் பொருள் எச்சங்களாக இன்றும் மீட்கப்பட்டு வருகின்றன.

பிளாஸ்ரிக், அலுமினியம் என்பவற்றின் வருகையால் மட்பாண்ட பயன்பாடு அருகியுள்ள போதும் இதன் வருகையால் நோய்களையும் சூழல் பாதிப்புகளையும் எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. இதனால் இப்போது மட்பான்ட பயன்பாடு மீண்டும் முளைவிடத் தொடங்கியுள்ளது.

முல்லைத்தீவு, முள்ளியவளை பிரதேசத்தில் மண்பாண்ட தொழிலில் ஈடுபட்டு வருகின்ற கந்தசாமி சந்திபோஸ் தெரிவிக்கையில், "மட்பாண்டங்களை உற்பத்தி செய்வதற்கான களிமன் என்பது, எல்லா இடங்களிலும் கிடைக்காது அதற்குரிய மண் குறிப்பிட்ட சில இடங்களில் தான் இருக்கும். அதனை எடுத்து வருவதற்கான அனுமதிகள் கிடைப்பதில்லை. அனுமதிகளைப் பெற்றுக் கொள்வது இலகுவான விடயமும் அல்ல; இதற்காக அலைந்து திரிய வேண்டும். இதனால் உற்பத்தி செய்யும் மட்பாண்டப் பொருட்களுக்கு அதிக செலவாகின்றது. ஆனால் அதிக விலைகளில் விற்க முடியாது" என்று தனது மனப்பாரத்தை இறக்கிவைத்தார்.











இதேவேளை, இவரது தந்தையான தங்கவேலு கந்தசாமி என்பவரும் முன்னர் ஒரு பெயர் போன மட்பாண்ட உற்பத்தியாளர். இவர், இறுதி யுத்தத்தின்போது காயமடைந்து நோய்வாய்ப்பட்ட நிலையில் தொழிலை செய்ய முடியாத நிலையில் வாழ்ந்து வருகின்றார்.

அது போன்று சொந்த முதலீடுகள் இல்லாதும் மூலப் பொருளான களிமண் பெறமுடியாத நிலையிலும் தொழிலைக் கைவிட்டு கூலித் தொழிலாளியாக கடமையாற்றும் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த கைலன் இராமு (வயது-58) என்பவர் கூறுகையில், "பரம்பரையான இத்தொழிலை 11 வயதிலேயே கற்றுத் தொடர்ந்து செய்து வருகிறேன். ஆனால் எதிர்காலத்தில் இத் தொழில் என்னுடன் நின்றுவிடும் என்ற ஒரு நிலை காணப்படுவதாகவும் கவலை தெரிவித்தார்.

அதாவது, மட்பாண்ட தொழிலில் ஈடுபட்டு வந்த தான் மீள் குடியேற்றத்தின் பின்னர் உரிய முதலீடுகள் இன்மை, களிமண் எடுக்க முடியாமை என்பவற்றால் தொழிலை கைவிட்டு இப்போது சம்பாளத்துக்கு வேலை செய்வதாகவும் தன்னுடைய பிள்ளைகள் வேறு தொழில்களை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் இத்தொழில் தன்னுடன் நின்றுவிடும் என்ற ஐயப்பாடும் இருப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

வீட்டுப் பாவனைப் பொருட்களில் மட்பாண்டங்கள் என்பது மிக முக்கியமான ஒன்றாகும். உடல் ஆரோக்கியத்தை பேணுகின்றவையாகவும் தமிழர்களின் ககலாசாரம், பாரம்பரியம், வரலாற்று விழுமியங்களுடன் பின்னிப்பிணைந்தவையாகவும் கானப்படுகின்றது.

எனவே இந்த மட்பாண்ட உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு அவர்களுக்கான மூலப்பொருட்களை பெற்றுக்கொள்வதற்கான அனுமதிகள் அல்லது,பெற்றுக் கொள்வதை இலகு படுத்தல் நவீன முறைகளுக்கு அவர்களை மேம் படுத்துதல் போன்ற செயற்பாடுகளை, துறை சார்ந்த அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என்பது யாவரினதும் எதிர்பார்ப்பாகும்.



LK Newspapers Viber community

# 10 நாள்கள் பத்திரமாய் இருந்து: முற்றுப்புள்ளி வைப்போம்

அடுத்து என்ன? நடக்கும் என்றிருந்த சந்தேகத்துக்கு விடைக்கொடுத்தாற் போல, பத்து நாள்களுக்கு நாட்டை முடக்குவதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது. இது "அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" என்பதற்கு ஒப்பானதாகவே இருக்கிறது. எப்படியோ ஓரளவுக்கு நிம்மதியான முடிவாகவே உள்ளது.

இக்காலப்பகுதியிலேனும் வீடுகளுக்குள்ளே முடங்கியிருந்து தொற்று பரவாமல் இருப்பதற்கு தற்பாதுகாத்துக் கொள்ளவேண்டும். தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளாதா 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசியை ஏற்றும் செயற்பாடுகளை இராணுவத்தினர் முடக்கத்துக்குள் முன்னெடுக்கவுள்ளனர்.

அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட முடிவு, காலம் கடந்த ஞானமாகும் எனும் குற்றச்சாட்டுகள் பரவலாக முன்வைக்கப்படுகின்றன. எனினும், இக்காலப்பகுதியில் கவனமாக இருக்கவேண்டியது கடப்பாடாகும்.

நாட்டை முடக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அரசாங்கத்தால் அரசியல்சாயம் பூசப்பட்டது. இதனையடுத்து, தற்பாதுகாப்புக்காக சில நகரங்களின் வர்த்தக சங்கங்கள் நகரங்களை மூடிவிட்டன. அரசாங்கத்தின் பணிப்பின்றியே, நகரங்கள் மூடப்பட்டமை ஒரு தலையிடியாக இருந்திக்கலாம்.

எதிர்க்கட்சிகள், தொழிற்சங்கங்கள், ஆளும்கட்சியின் பங்காளிகள், பிரதான பங்காளி ஆகியன, நாட்டை முடக்குமாறு விடுத்த கோரிக்கைகளுக்கு செவிசாய்க்காத ஜனாதிபதி, மாநாயக்க தேரர்கள் கோரிக்கை விடுத்ததன் பின்னர், சீர்தூக்கி பார்த்து முடிவொன்றை எட்டியிருக்கின்றார். இதுவும் கூட, பௌத்த-சிங்கள மக்களிடத்தில் சரிந்திருக்கும் செல்வாக்கை நிலைநிறுத்துவதற்கான அரசியல் தீர்மானமாகவே பார்க்கவேண்டும்.

ஆட்சியை கவிழ்க்கும் முயற்சியிலேயே எதிர்க்கட்சினர் செயற்பட்டனர். தொழிற்சங்கங்கள் அதற்கு ஒத்துஊதின. இந்நிலையில், மகாசங்கத்தினரின் கோரிக்கைக்கு செவிசாய்த்தே, நாட்டை முடக்குவதற்கு ஜனாதிபதி தீர்மானித்தார் என்ற விளக்கங்கள் அளிக்கப்பட்டாலும் வியப்பதற்கில்லை.

ஆரம்பத்திலேயே முடக்கியிருந்தால், இந்தளவுக்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்காது. மரணங்களும் சம்பவித்திருக்காது. ஆனால், காலங்கடந்த ஞானத்தால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் ஊடாக, தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைக்கமுடியாது. ஆயினும், புதிய தொற்றாளர்கள் இனங்காண்பது ஓரளவுக்கு குறையும். இதுவும் மக்களின் கைகளிலேயே உள்ளது.

நாடு முடக்கப்பட்டிருந்தாலும் திறந்திருந்தாலும் சாதாரண மக்களே பாதிக்கப்படுவர் என்பதில் எவ்விதமான ஐயமும் இல்லை என்பதால், வீடுகளுக்குள்ளே முடங்கியிருப்பதே சகலரும் நன்மை பயக்கும். அத்தியாவசிய சேவைகளுக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகளின் கீழ், அத்தியவசியமற்ற விடயங்களே கடந்த முடக்கங்களின் போது முன்னெடுக்கப்பட்டன. இவ்வாறானதொரு நிலைமை, இம்முறையும் ஏற்படாதவகையில் உறுதிப்படுத்தவேண்டும்.

ஒரிரு பலகைகளை திறந்துவைத்துக்கொண்டு, இரண்டு மடங்குகளில் பொருள்களை விற்பனைச் செய்யக்கூடாது. சட்டவிரோதமான முறையில் பொருள்களை விற்பனை செய்பவர்கள் குறித்தும் பதுக்கிவைத்து, நெருப்பு விலைகளில் விற்போர் தொடர்பிலும் விழிப்பாக இருக்கவேண்டும்.

இந்த முடக்கத்துக்கு 10ஆவது நாள் முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமா? அல்லது நீடிக்கவேண்டுமா என்பதெல்லாம் மக்களின் கைகளிலேயே உள்ளது என்பதை நினைவூட்டுகின்றோம்.

## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்



பிரச்சினைகளிலிருந்து தப்பிக்க மௌனமும், ஒதுங்கி ஒளிவதும் சரிப்பிட்டுவராது. வீரமுடன் எதிர்கொண்டால் எல்லாம் சரிவர நிவர்த்தியாகிவிடும்.

ஆனால், பிரச்சினைகளுக்கு நீங்களே! காரணமாகி அதனை பிறர்மீது சாட்டுதல் செய்வது துரோகம். தேவையற்ற விதத்தில் உங்களை எவர் உட்படுத்தினால் அதனைக் கண்மூடிக் கொண்டிருப்பது ஏற்படையதல்ல.

இதனால் தேவையற்ற குற்றச்சாட்டுகளை ஏற்பது போலாகிவிடும். இன்று குடும்பங்களுக்குள் தேவையற்ற தர்க்கங்களினால் அமைதி குலைந்து நிற்கிறது.

சின்ன விஷயங்களுக்கும் ஆவேசப்படுகின்றார்கள். குடும்ப விஷயங்கள், தவறான புரிதலினால் உருவாகின்றன. எனவே, அதனை உடன் நீங்கிவிடலாம். அவை பூதாகாரமான விடயம் எனக் கருதலாகாது.

குடும்ப உறவு இறுக்கமானதாக இருக்க கோபங்களை களைவதுடன் குடும்ப அங்கத்தினரின் தேவைகளையும் புரிந்துகொள்ளவும் வேண்டும்.

பாசமிகு குடும்பத்தினர் எதனையும் ஒரு பொருட்டாகக் கருதுவதுமில்லை. ஒரு குடும்பம் பல குடும்பங்களுக்கு எடுத்துக்காட்டாகவேண்டும்.

பருத்தியூர் பால-வயிரவநாதன்.

# தலைதூக்கும் துப்பாக்கிகள்

**லக்ஸ்மன்**

மறக்கப்படவேண்டியவைகளே மறுபடி மறுபடியாக அரங்கேறுகின்றன. அதன் தொடர்ச்சி என்னவாகும் என்பதான கவலையும் சிந்தனையுமாகவே வாழ்க்கையை நகர்த்துவோம்.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம்; தற்காப்பு நிலையை அடைந்து மௌனித்ததன் பின் ஆயுதக் கலாசாரம் என்பது பூச்சிய நிலையை அடைந்தது. இத்தகைய பின்புலத்தில் மூன்று நான்கு ஆண்டுகள் கடந்த பின் இச் சூழ்நிலை படிப்படியாக மேலெழுந்தது. வட புலத்திலே வாள் வெட்டுக் கலாசாரமும் கிழக்கிலங்கையில் துப்பாக்கிக் கலாசாரமும் அங்கொன்றும் இங்கொன்றுமாக முகிழ்த்து தற்பொழுது அன்றாட செயல் நிகழ்வுகளில் ஒன்றாக மாறிவருகின்றது. இத்தகைய வன்முறைக் கலாசாரமானது முற்றுகைக்கும் முறியடிப்புக்கும் உட்பட்டிருந்த தமிழ்த் தேசிய விடுதலை ஆயுதப் போராட்ட மையத்தில் பல்வேறு எதிர் விளைவுகளை ஏற்படுத்தி நிற்கின்றது.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட முனைவுகளுக்கு அப்பாற்பட்ட வகையில் முளைத்தெழும் புதிய நிலச் சுவாந்த அடிவருடி கும்பல்களும், சர்வதேச, தேசிய, உடன்பாட்டுச் செயலொழுங்கில் தங்களுக்கொன வடிவமைக்கப்பட்ட மாபியா, போதைவஸ்த்துக் கடத்தல் குழுமங்களும் தேசிய விடுதலைப் போராட்டத்தின் பண்புகளைச் சாயம் பூசி அரச இராணுவ மூலோபாய கைங்கரியங்களுக்குள் நுழைகின்றன. அந்தப் பின்புலத்தில் தொடர்புபட்ட சுயலாப அரசியல் நலன் கருதியும் தங்கள் சொந்த வியாபார மூல உபாயங்களைப் பயன்படுத்தியும் அதனை ஸ்த்திரப்படுத்துவதற்கான மாபியா தொடர்பாடல் செயலொழுங்கில் வடிவமைக்கப்பில் மறுக்கப்பட்ட போதைவஸ்த்துப் பிரயோகங்களை சுயலாப நோக்கில் நடைபெறுகின்றன.

இது இலங்கை பாரம்பரியத்துக்கும் பண்பாட்டுக்கும் சமூக ஒழுங்கு முறைக்கும் கல்விப் பாரம்பரியங்களுக்கும் முரணான முறையில் அரசியல் ஆசீர்வாதத்தோடு முன்னெடுத்துவரும் போதைப்பொருள் கடத்தல் நடைமுறைகளும் அதற்குச் சமாந்தரமான வகையில் உள்ளூர் உற்பத்திகளையும் பொருளாதார முறைமைகளையும் சுரண்டுகின்ற காலனித்துவ உணர்வோடு கூடிய குட்டிப் பூர்சுவாக்களும் தமிழ்த் தேசியச் சிந்தனைகளையும், தமிழர் தம் விடுதலைப் போராட்ட உணர்வுகளையும் சிறுபான்மைச் சமூகங்களின் தேவைப்பாடுகளையும் எவ்வாறு கேள்விக்குரியாக்கி சிதைவடையச் செய்திருக்கின்றதோ, அத்தகைய நிலைமைகள் இன்று பெரும்பான்மைச் சமூகத்தவரான சிங்கள மக்கள் மத்தியிலும் இதனைத் தோற்றுவித்துள்ளது.

சிங்களத் தேசியவாதத்தின் ஒத்த ஏற்புடைமையில் பல்தேசியச் சிந்தனைகளை ஒருங்கிணைத்து சிங்களத் தேசியம் என்னும் கருத்தொன்மையை சிங்களத் தேசியவாதத்தின் தனி ஒர்மைக் கொள்கையாக பிரகடனப்படுத்தி கடந்த ஆண்டிலே ஆட்சி அதிகாரம் கையகப்படுத்தப்பட்டது. தேசியவாதப் போக்குகளையும் தேசியவாதச் சிந்தனைகளை எதேச்சாதிகாரமாகக் கைக்கொண்டு சிறுபான்மை இன அறைகூவல்களையும் விருப்புரிமைகளையும், கேள்விக்கும் ஐயப்பாட்டுக்குமுரியதாக்கி சிறுபான்மைச் சமூகத்தைக் கண்கொண்டு பார்க்கின்ற முறைமையை பெருந்தேசியவாத சிந்தனா சக்திகள் உரப்படுத்துகின்றன.

இதன் எதேச்சதிகாரச் செயற்பாடுகளை முதன்மைப்படுத்தி குடும்ப அதிகார மையத்துள் இலங்கைப் பொருளாதார பொருண்மியத்தை உள்ளடக்கப்படுத்தி இலங்கை சுதேசியத்தின் பொருளாதார விருத்திக்கும் சுய உற்பத்தி முறைக்கும் சுதேசிய வியாபார நலன்களுக்கு முரணான வகையில் பொருளாதார வியூகங்களை வகுக்கின்ற நிலைமை காணப்படுகிறது. தேசிய நலன்களில் அக்கறையற்று சொந்த லாப மூலோபாயங்களைக் கருத்தில் கொண்டு இலங்கையில் அதிகரித்துச் செல்லும் பணவீக்க நிலைமையினையும் டொலர்களின் பெறுமதி வீழ்ச்சியையும் சுதேசிய பொருளாதார உற்பத்திகளின் வீழ்ச்சியையும் கருத்தில் கொள்ளாத நகர்வுகள் காணப்படுகின்றன.

குடும்ப பொருண்மிய லாப அரசியலை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்பட்ட திட்டங்கள் மூலம் தேசிய நலன் என்னும் போரர்வையில் அதிகரிக்கப்பட்ட ஏற்றுமதி உற்பத்தி முறைமைகளும் அவற்றில் அடையமுடியா லாபங்களை பிரதியிட்டுக் கொள்வதற்காக வரையறுக்கப்பட்ட இறக்குமதி வரித் தீர்வைகளும் சர்வதேச ரீதியில் அதிகரித்துவரும் கொவிட் கெடுபிடிகளும் அதற்கான மாற்று உபாயங்களில் பின்பற்றப்படும் தடுப்பூசிக் கமிசன் விவகாரங்கும் இலங்கை அரசியல் சூழ்நிலையில் அடைக்கமுடியாத கடன் பழுக்களும் இலங்கைப் பொருளாதாரத்தை ஆட்டங்காணச் செய்துள்ளன.

இந்த உள்ளூர், வெளியூர், தேசிய, சர்வதேச விவகாரங்கள் இலங்கைத் தீவில் அபிவிருத்தி தொடர்பாக பேச்சளவில் முன்னெடுக்கப்படும் சிந்தனைகளும், திட்டங்களும் ஒரு தேர்தல் பிரச்சாரக் கூற்றாகவே மக்களைச் சென்றடைந்துள்ளன.

இந்த உள் விவகாரங்களின் வலிகளையும் வேதனைகளையும் பாதிப்புக்களையும் தேவைகளையும் வேண்டுதல்களையும் இறைஞ்சி வேண்டி எதிர்பார்த்து நிற்கும் மக்களின் வாழ்வியலில் முடிவுற்ற போர் நிதி அழுத்தங்களும் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கொவிட் நிதி அழுத்தங்களும் பாமர மக்களையும் மத்தியதர வர்க்கத்தினரையும் மிகுந்த சுமைக்கு உள்ளாக்கியுள்ளது. உலக நாடுகளின் பணப் பொருளாதார வேதனக் கொடுப்பனவுகளின் பின்புலத்தை ஆராய்கின்ற போது மிக மோசமான வேதனக் கொடுப்பனவுகளை அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் ஒரு முதன்மை நாடாக இலங்கை விளங்குகின்றது. அதற்குச் சிறந்த சான்றாக ஆசிரியர், அதிபர், கல்வியியலாளர், சுகாதார ஊழியர்கள், போக்குவரத்துத் துறை சார்ந்தவர்களது போராட்டங்களைக் கொள்ளலாம். இந்தகைய சூழ்நிலையில் இயற்கை வளச் சுரண்டல்களில் ஆளும் தரப்பின் ஆசீர்வாதத்தோடு மக்களது விருப்புகளுக்கு முரணனான வகையில் நடத்தப்படுகின்ற காணிச் சுரண்டல், நீர்வளச் சுரண்டல், மண் வளச் சுரண்டல் என்பனவும் மக்களது உழைப்பினை வரிவிதங்களாலும் பல்வேறு சட்டப்பிடிமானங்களாலும் சுரண்டப்படகின்ற வேதனச் சுரண்டல்கள் குறிப்பாக பெருந்தோட்டத்துறையினரையும் விட்டுவைக்கவில்லை.

இந்த வகையிலே அண்மைக்காலத்தில் வட கிழக்கில் அதிகரித்துவரும் மண் சுரண்டல் மோசடிகளில் பல்வேறு முறைமையில் உயிர்ப்பலிகளும் உயிர் அச்சுறுத்தல்களும், அரச ஆசீர்வாதத்தோடு அல்லது அனுகூலத்தோடு ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த வகையில் கிழக்கில்

மட்டக்களப்பில் துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதி. இது கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஊடகங்களில் செய்தித் தலைப்பு. கடந்த வாரத்தில் இதே போன்றதொரு துப்பாக்கிப்பிரயோகம் நடைபெற்றது. இரண்டும் மண் கடத்தலுடன் சம்பந்தப்பட்டதுதான். இரண்டு மாதங்களுக்கு முன்னர் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் மெய்ப்பாதுகாவலர் சுட்டத்தில் சம்பவ இடத்தில் பொது மகன் ஒருவர் உயிரிழந்தார். அதன் வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது. இதுவும் மணல் சம்பந்தப்பட்டதாகவே பேசப்படுகிறது.

இவ்வாறாக பெருந்தேசியச் சிந்தனை வாதத்தோடும் தேசிய இனவாத அரசியலோடும்; ஒன்றிணைந்து தேர்தலில் முகம் கொண்டு அதிகாரங்களைக் கைப்பற்றி வாக்களித்த மக்களை நசுக்கும் ஒடுக்குமுறை அரசியலில் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் மாத்திரமல்லாது சிறுபான்மைத் தமிழ், முஸ்லிம் மக்களும் மிகுந்த பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

உற்பத்தி, முதலீடு, நீடித்த பொருளாதாரம், வேதனம், பொருளாதார விருத்தி, சுபீட்சம், மக்கள் மகிழ்ச்சி, மக்கள் சேமிப்பு என்ற மக்களின் நம்பிக்கைக்கு முரணான வேதாந்தப் பேரினவாத அரசியலும் அதன் அதிகாரமளிக்கப்படாத சாசனங்களும் இலங்கை அரசியல் சாசனத்துக்கு முரணான வகையில் பன்சமூக மக்களின் வாழ்வியலை எதேச்சதிகாரமான வகையில் சுபளீகரம் செய்து நிற்கின்றது.

தேசியம் சுயநிர்ணயம், சுபீட்சம் என்ற அடிப்படையில் சுதேசிய பொருளாதார வீழ்ச்சிக்கும் பரஸ்பர பொருளாதார ஸ்தீரப்பாட்டுக்கும் மருந்தாக நாட்டின் பொருளாதாரச் சுமையின் வீக்கத்தை கட்டுக்கோப்புக்குள் கொண்டுவருவதாக இருந்தால் ஊழலற்ற, ஜனநாயக மயப்படுத்தப்பட்டதென விதந்துரைக்கப்பட்ட பொருளாதார முறைமைகளைப் பின்பற்றுவதும், ஏற்றுமதி, இறக்குதி பொருளாதாரத்தில் ஒரு சமாந்தர முறைமையைப் பின்பற்றுவதும் முக்கியமாகும். அதே போல் சர்வதேச அழுத்தங்களில் நின்றும் சர்வதேச பொருளாதார அச்சுறுத்தல்களிலிருந்தும் தம்மை இலங்கைத் தீவு விடு;விக்க கொள்வதாயின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக பெரும்பான்மை மக்களினது விருப்புக்கு அமைவாக குறைந்த பட்சம் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துதல் வேண்டும். அத்தோடு வற்றிப் போயிருக்கும் மத்திய வங்கியினுடைய நிலையான நிதியை மீட்டெடுப்பதாயின் வரையறுக்கப்பட்டதான இறக்குமதிக்கான பொருண்மியத்தில் அரசு கவனம் செலுத்தல் வேண்டும்.

வெறுமனே பண வீக்க நிலை காரணமாக முற்றுமுழுதாக இறக்குமதியினைத் தவிர்த்து ஏற்றுமதியை முன்னெடுப்பது சிரமமானதாகும்.

இத்தீவில் அமிழ்ந்து போயிருக்கின்ற பிரச்சினைக்கான தீர்வு என்பது, சரியானதொரு அரசியல் கொள்கையை மீட்டெடுப்பதன் மூலமே சாத்திமாகும். எனவே அரசியல் தீர்வும், கொவிட் நடைமுறைகளும், சர்வதேச மனித உரிமை அமைப்பினதும் கோரிக்கைகளுக்கு அமைவாக இலங்கை சோசலிச ஜனநாயக் குடியரசின் தலைவர்கள் அந்த மக்களின் மன விருப்புக்களை அறிந்து அவர்கள் சார்பாக நாட்டினுடைய ஜனநாயகத்தினை நிலை நிறுத்துவதே சிறப்பு. ஆயுதம் அதிகாரத்தின் அடையாளம், அடக்குமுறையின் அடையாளம் என்ற வகையில், அதற்குள் துப்பாக்கிகள் நிமிர்த்தப்படுதல் தவிர்க்கப்படுவதே முக்கியமானது.

## கழிதங்கள்

### வீதியில் நெல் உலரவிடுவதால் விபத்துகள்

அம்பாறை மாவட்டத்தில் தற்போது அடைமழை மீண்டும் பெய்து வருவதால், அறுவடை செய்யப்பட்ட நெல்லைப் பிரதான வீதிகள், உள்ளக வீதிகளில் உலரவிடுவதால் போக்குவரத்து சீர்கேடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நிந்தவூர், சம்மாந்துறை, கல்முனை, நாவிதன்வெளி, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, சொறிக்கல்முனை, சவளக்கடை, மத்தியமுகாம் ஆகிய பிரதேசங்களிலுள்ள வீதிகளில் இச்செயற்பாடு தொடர்கதையாகவே உள்ளது.

நெல் அறுவடை தற்போது மும்முரமாக நடைபெற்று வரும் நிலையில், அறுவடை செய்யப்பட்ட நெல்லைச் சந்தைப்படுத்துவதற்காக, ஈரப்பதமான நெல்லை உலரவிடுவதற்காக வீதிகளில் காயவிடுகின்றனர்.

குறித்த நிலைமை, போதியளவு நெல் உலரவிடும் தளம் இன்மை காரணமாக உருவானதாகும். வீதிகளில் உலர விடப்படும் நெற்கள் ஒரு பக்க வீதியை தடைசெய்து உலரவிடுவதால் போக்குவரத்துகளுக்கு வீதி தடைப்படுவதுடன் வீண் விபத்துகள் ஏற்படுவதற்கும் காரணமாக உள்ளன.

எனவே, வீதிகளில் நெற்களை உலரவிடுவதற்கு எதிராக பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடப்படுகின்றது.

பாறுக் ஷிஹான்



LKNewspapers Viber Community

மனிதாபிமானத்தின் உச்சத்தில்

# இலங்கை இராணுவம்

வா. சுதர்ஷன்

நட்புறவு இதைவிட இவ்வுலகில் நாம் சம்பாதிப்பதற்கு விலையுயர்ந்த பொருட்கள் எவையும் இல்லை என்ற வாக்கு, வள்ளுவர் வாழ்ந்த காலம் முதல் இன்று வரையிலுமே வலிதான ஒன்றாகவே இருக்கிறது. அதேபோல், நட்பு அதிகாரத்தில் 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்' என்பதற்கு இணங்க, ஒருவருக்கு நன்மை செய்வதால் கிடைப்பதைப் போன்ற ஆறுதலும் அகமகிழ்வும் ஒருவரைப் பழிதீர்ப்பதால் ஒருபோதும் கிடைக்கப்போவதில்லை.

முன்னோர்களின் இவ்வாறான பொன்னான வாக்குகள் நமக்கு வழிகாட்டுவனவாக இருந்தாலும், அவற்றை ஒருபுறம் தள்ளிவிட்டு தனிப்பட்ட அடையாளங்களை மையப்படுத்தி, இன்றளவிலும் பல நாடுகளும் நாடுகளுக்குள் இருக்கும் மக்களும் போராடிக்கொண்டு தான் இருக்கின்றனர்.

நம் நாட்டின் இரு சகோதர இனக் குழுக்கள் இருவேறு தரப்புகளாகப் பிரிந்து போராடிக்கொண்டிருந்ததைக் கண்டு, தனது பிள்ளைகளின் மோதலை நிறுத்த வழியின்றி, இலங்கைத் தாயும் கண்ணீர் சிந்திக்கொண்டிருந்தாள். அந்த அழுகுரல் கேட்டதாலோ என்னவோ 2009ஆம் ஆண்டு மே மாதத்தில் இலங்கையின் உள்நாட்டு யுத்தம் நிறைவைக் கண்டது.









சுதந்திரமானதும் ஒன்றிணைந்ததுமான இலங்கை தேசத்தை கட்டியெழுப்பிய பெருமை கொண்ட இலங்கை இராணுவம், இன்றளவில் யுத்தத்திற்கும் அப்பால் சென்று, மனிதாபிமான அடிப்படையிலான பல சமூக மேம்பாட்டுத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. இந்த திட்டங்கள் அனைத்தும் பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவ தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வாவின் தலைமையில் முன்னெடுத்து வரப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

தேச அபிருத்தி பணிகள் என்னும் போது, வீதி நிர்மாணம், புனரமைப்பு, நீர்ப்பாசன கட்டுமானம், குளங்கள் புனரமைப்பு , பாடசாலை கட்டடங்களை அமைத்தல், மேம்பாலங்களை அமைத்தல், விளையாட்டு திடல்களை அமைத்தல், விளையாட்டு அரங்கங்களை அமைத்தல் என்று வரிசைப்படுத்தலாம். அத்தோடு, 'சுற்றுச் சூழலுடன் நட்பு - புதிய நாடு' என்ற விவசாய திட்டமிடலூடாக தேசத்திற்கு உயிரூட்டி பசுமையாக்கும் வகையில், காடு வளர்ப்பு மரங்களின் செறிவை அதிகரித்தல், நெற்பயிர்ச் செய்கை, மிளகாய் உள்ளிட்ட மரக்கறி உற்பத்தி பண்ணைகளை நடத்தல் நாட்டின் தேவையை நிரம்பல் செய்யும் ஆற்றலுடன் கால்நடை வளர்ப்புக்கு தேவையான உதவிகளையும் வழங்கி வருகின்றனர்.

இவ்வாறிருக்க இவை அனைத்தும் இலங்கை இராணுவம் பற்றி அன்றாடம் கேள்விப்படும் விடயங்கள் தான் என்பதால் அதற்கு அப்பால் சென்று உலகின் எந்தவோர் இராணுவமும் முன்னெடுக்காத எதிராளிகளுக்கு நட்புக்கரம் நீட்டி அவர்களையும் சகோதரர்கள் என அணைத்துக்கொள்ளும் முயற்சிதான் தற்காலத்தில் பேசுபொருளாகியிருக்கிறது.

அந்தவகையில் அண்மையில் கொவிட்- 19 பரவல் தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையத்தின் தலைவரான ஜெனரல் ஷவேந்திர சில்வா யாழ்ப்பாணத்தில் காணப்படும் கொவிட்-19 வைரஸ் பரவல் நிலைமை தொடர்பில் ஆராய்வதற்காக சென்றிருந்தார். இதன்போது நாட்டின் சுதந்திர தினத்தை முன்னிட்டி ஜனாதிபதி பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்ட முன்னாள் புலிகள் அமைப்பின் போராளிகளை சந்தித்து கலந்துரையாடிய தளபதி அவர்களுக்கான பிரச்சினைகள் தொடர்பில் தேடி ஆராய்ந்ததுடன் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதற்கான சுய தொழில் முயற்சிகளை முன்னெடுப்பதற்கான 15 முன்னாள் போராளிகளுக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் என்ற அடிப்படையில் நிதி உதவியையும் வழங்கினார்.

அத்தோடு விட்டுவிடாமல் அவர்களுக்கு ஏதேனும் நெருக்கடிகள் ஏற்படும் பட்சத்தில் ஓடி வந்து உதவ நாங்கள் இருக்கிறோம் அதனால் நாட்டின் சட்டத்தை மதிக்கும் நற்பிரஜைகளாக செயற்படும் மாற்றுக் கடமையை மட்டும் அவர்கள் செய்தால் போதுமென்ற அன்பான வேண்டுகோளையும்



முன்வைத்தார். அங்கு தளபதியுடன் ஆவலாகக் கலந்துரையாடிய முன்னாள் போராளிகள் தளபதியின் முயற்சிக்கு நன்றிகளையும் தெரிவித்தனர்.

அத்தோடு மேற்குறிப்பிட்டவாறு முன்னைய காலங்களில் புலிகள் அமைப்பில் இருந்த போது, இராணுவத்தினர் மீது அவர்கள் நடத்திய தாக்குதல்களால் இராணுவ சிப்பாய்கள் பலர் உயிரிழந்துள்ளதை போன்று பலர் காயமடைந்தும் உடற்பாகங்களை இழந்த நிலையிலும் வாழ்ந்து வருகின்றனர். இருப்பினும் அந்த எண்ணத்தை முன்னிலைப்படுத்திக் கொண்டு முன்னாள் போராளிகளை எதிரிகளாகவே, எதிர்க்க வேண்டும் என்ற நோக்கத்திலோ பார்க்கப்போவதில்லை; மாறாக, நட்புக்கரம் நீட்டவே ஆசைப்படுகிறோம் அதனை ஏற்றுக்கொள்ளுங்கள் என்ற தயவான கோரிக்கையையும் அவர் விடுத்தார்.

அந்த வேண்டுகோளை புறந்தள்ளிவிட அவர்களுக்கும் மனம் வரவில்லை. எனவே தளபதியின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட அவர்களுக்கு தளபதி மற்றுமொரு இனிப்பான தகவலையும் வழங்கினார். எதிர்காலத்தில் சமுதாயத்திற்குள் அவர்களின் நன்னடத்தை சிறைகளில் வாடும் ஏனைய முன்னாள் போராளிகளையும் விடுதலை செய்ய வழிவகுக்கும் எனவும் உறுதியளித்தார்.

யாழ். பாதுகாப்பு படைத் தலைமையக தளபதியும் தற்போதைய இராணுவ பதவி நிலை பிரதானியுமான மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேராவின் ஒருங்கிணைப்பில் தற்போயை யாழ். பாதுகாப்பு படைத் தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் கொடிதுவக்குவின் ஏற்பாட்டில் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கிற்கும் தெற்கிற்கும் நல்ல பாடம் சொல்லும் மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தின் நன்கொடையாளர் வாமதேவன் தியாகேந்திரன், நல்லூரை பிறப்பிடமாக கொண்டவர். அவர் ஆரம்பம் முதலே பிறருக்கான அன்பளிப்புகளை வழங்கும் எண்ணத்தை கொண்டவராக விளங்கினார். இதன் இரண்டாம் கட்டம் வெகு விரைவில் முன்னெடுக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.


அதற்கு உதாரணமாக சமூகநல நிறுவனம் ஒன்றை கட்டமைத்து அதன் கீழ் அவரால் முன்னெடுக்கப்பட்ட யாழ். மாந்தை வைத்தியசாலையில் 90 இலட்சம் செலவில் நிர்மாணிக்கப்பட்ட உடற் சுகாதாரத்திற்கான வைத்திய பிரிவு, ஒரு கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட தெல்லிப்பளை வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு, வவுனியா வைத்தியசாலை 35 இலட்சம் பெறுமதியான குடிநீர் திட்டம், ஜனாதிபதியால் நிறுவப்பட்ட கொவிட் - 19 நிவாரண நிதியத்திற்கு ஒரு கோடி ரூபாயை வழங்கல் உள்ளிட்ட பல திட்டங்களை முன்னெடுத்திருந்துள்ளமை குறிப்பிடத்தாகும்.

அதேபோல், எதிர்காலத்தில் வசதியற்ற பகுதிகளில் காணப்படும் சுகாதார அலுவலகங்களை மேம்படுத்தல், சிறுவர் வைத்தியசாலைகளுக்கான பூங்காக்கள், யாழ். வைத்தியசாலையில் மரணித்தவர்களின் உடல்களை வைப்பதற்கான பிணவறை குழந்தைகள் பாக்கியம் இல்லாதோருக்கு இலவச சிகிச்சை அளிப்பதற்கான வைத்தியசாலை, யாழ்ப்பாணத்தில் ஆடைத் தொழிற்சாலைகளை உருவாக்கி வேலைவாய்ப்புகளையும் உருவாக்குதல் போன்ற பல திட்டங்களை தன்னகத்தே கொண்டுள்ள அவர், இராணுவத்தின் சேவையின்பால் கொண்ட ஈர்ப்பால் இத்திட்டங்களை இராணுவத்துடன் கைகோர்த்துக்கொண்டு முன்னெடுக்க முன்வந்துள்ளமை சிறப்பம்சமாகும்.



One Galle Face Business Tower இல் ESOFT இன்டர்நஷனல் கம்பஸ் தனது வளாகத்தை

# திறக்க திட்டம்




One Galle Face (Shangri-La) Business Tower இல் அமைந்துள்ள ESOFT இன்டர்நஷனல் கம்பஸ் வளாகம்

புத்தாக்கமான மற்றும் நவீன கல்வித் தீர்வுகளை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்களுக்கு வழங்குவதில் முன்னோடியாகத் திகழும் ESOFT குழுமம், தனது நவீன வசதிகள் படைத்த ESOFT இன்டர்நஷனல் கம்பஸ் (EIC) வளாகத்தை 2021 செப்டெம்பர் மாதத்தில் One Galle Face (Shangri-La) Business Tower இல் நிறுவத் திட்டமிட்டுள்ளது.

புதிய நவீன வசதிகள் படைத்த சர்வதேச கம்பஸ் ஒன்றிலிருந்து கிடைக்கும் வசதிகளை அனுபவிக்க எதிர்பார்க்கும் மாணவர்களுக்கு, முதல் அல்லது இரண்டாவது வருடத்தில் கல்வி பயின்றதன் பின்னர் இலங்கையின் தனியார் கல்வித் துறையில் EIC ஒப்பற்ற அனுபவத்தை வழங்குவதாக அமைந்திருக்கும். EIC இல் கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கு உலகத் தரம் வாய்ந்த, தரமான சொகுசான அம்சங்கள் நிறைந்த சூழலில் தமது கல்வியைத் தொடரக்கூடியதாக இருக்கும்.

வியாபாரம், கணினி மற்றும் சட்டம் தொடர்பான கட்டமைக்கப்பட்ட பட்டப்படிப்புகளை வழங்கும் வகையில் ESOFT இன்டர்நஷனல் கம்பஸ் அமைந்துள்ளது. அதற்காக லண்டனின் Kingston பல்கலைக்கழகத்துடன் கைகோர்த்துள்ளது. ஒப்பற்ற பாடவிதானத்துடன், EIC ஐச் சேர்ந்த மாணவர்களுக்கு BSc (Hons) in Cyber Security and Digital Forensics, BSc (Hons) in Multimedia Technology, BSc (Hons) in Entrepreneurship and Innovation, BSc (Hons) in International Business, மற்றும் LLB மற்றும் graduate பட்டங்களை EIC இடமிருந்து அல்லது பிரித்தானியாவின் Kingston University London இடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

கொழும்பின் காலி முகத் திடலுக்கு முகப்பான பகுதியில், இந்து சமுத்திரத்தின் பரந்த காட்சியமைப்புடன் இந்த பிரத்தியேகமான கம்பஸ் வளாகம் அமைந்துள்ளது. இந்த வளாகத்தில் நவீன வகுப்பறை பயிலல், நூலகங்கள் வசதிகள், பரந்தளவு பொழுதுபோக்கு வசதிகள், நவீன ஆய்வுகூட வசதிகள் போன்றவற்றுடன், நவீன தொழில்நுட்ப ஒன்றிணைப்பு, போன்றன வழங்கப்பட்டு, சர்வதேச பயிலல் அனுபவத்தை தொடர்வதற்கான நம்பிக்கையும், சௌகரியமும் வழங்கப்படுகின்றன.

**“100 வருடங்களுக்கு மேலான பழைமை வாய்ந்த இந்த பல்கலைக்கழகம், சர்வதேச ரீதியில் கீர்த்தியைக் கொண்டுள்ளது. பல்வேறு பங்காண்மைகள், முன்னணி ஆய்வுகளில் பங்கேற்றுள்ளது. நான்கு கம்பஸ்களில் ஐந்து வளாகங்களைக் கொண்டுள்ளதுடன், மொத்தமாக 20,000 மாணவர்கள் தொகையையும் தன்வசம் கொண்டுள்ளது. 2021 ஆம் ஆண்டுக்கான Guardian University Guide league tables இல் நாட்டிலுள்ள சிறந்த 40 நிலையங்களில் ஒன்றாக Kingston University பட்டியலிடப்பட்டுள்ளது**

ESOFT குருப் ஒஃப் கம்பனிஸ் தவிசாளர் கலாநிதி. தயான் ராஜபக்ஷ இந்த புதிய வளாகத்தின் அறிமுகம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், "மாணவர்களுக்கு சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கற்கைகளைத் தொடர்வதற்கான வாய்ப்பை வழங்கி, பிரயோகத் திறன்களுடன், தொழிற்துறைசார் வலையமைப்பு, நிஜ உலக அனுபவங்களை பெற்றுக் கொள்ள வழிகோலுவதாக அமைந்துள்ளது. இதனூடாக, மாணவர்களுக்கு ஐக்கிய இராஜ்ஜியத்தில் பயிலும் வகையில் மாற்றியமைத்து, தயார்ப்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருக்கும். இதை மேற்கொள்ளும் வகையில் ESOFT இன்டர்நஷனல் கம்பஸ் வடிவமைக்கப்பட்டுள்ளது" என்றார்.

தென் மேற்கு லண்டன் பகுதியில் தேம்ஸ் நதிக் கரையை அண்மித்த பொது ஆய்வு பல்கலைக்கழகமாக Kingston University London திகழ்கின்றது. மத்திய லண்டனிலிருந்து 25 நிமிடங்களில் ரயிலில் பயணிக்க முடியும். 100 வருடங்களுக்கு மேலான பழைமை வாய்ந்த இந்த பல்கலைக்கழகம், சர்வதேச ரீதியில் வளர்ந்து வரும் கீர்த்தி நாமத்தைக் கொண்டுள்ளது. பல்வேறு பங்காண்மைகள் மற்றும் முன்னணி ஆய்வுகளில் பங்கேற்றுள்ளது. நான்கு கம்பஸ்களில் ஐந்து வளாகங்களைக் கொண்டுள்ளதுடன், மொத்தமாக 20,000 மாணவர்கள் தொகையையும் தன்வசம் கொண்டுள்ளது. 2021 ஆம் ஆண்டுக்கான Guardian University Guide league tables இல் நாட்டிலுள்ள சிறந்த 40 நிலையங்களில் ஒன்றாக Kingston University பட்டியலிடப்பட்டுள்ளது.

2021 செப்டெம்பர் மாணவர் சேர்ப்புக்காக தற்போது விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் பணிகளை EIC மேற்கொள்கின்றது. மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புடன், வருடமொன்றில் ஒரு தடவை மாத்திரம் ஆட்சேர்ப்பு இடம்பெறவுள்ள நிலையில், அனுமதிகள் விரைவில் பூர்த்தியாகிவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. EIC விண்ணப்ப அணியை 0766 445 445, 0766 445 446 ஊடாக தொடர்பு கொள்ளவும். www.esoftinternational.com எனும் இணையத்தளத்தினூடாக பதிவு செய்து வாழ்க்கையை மாற்றியமைக்கும் கல்விப் பயணத்தை ஆரம்பியுங்கள்.

LK Newspaper Community



# நிலைத்திருக்குமா?



முருகவேல் சண்முகன்







ஆப்கானிஸ்தானை இரண்டு தசாப்தங்களுக்குப் பின்னர் தலிபான்கள் கடந்த வாரம் கைப்பற்றியிருந்தனர்.

இந்நிலையில், கடந்த 1996ஆம் ஆண்டிலிருந்து 2001ஆம் ஆண்டு வரையில் ஆப்கானிஸ்தானில் நிலவிய தலிபான்களின் ஆட்சியானது திரும்பவிருக்கின்றது.

அந்தவகையில், குறித்த தலிபான் ஆட்சியில் மக்களின் அடிப்படை உரிமைகள் குறிப்பாக பெண்களின் உரிமைகள் மறுக்கப்பட்டிருந்த நிலையிலேயே தற்போது பறக்கும் விமானத்திலாவது தொங்கிக் கொண்டு சென்று தப்பித்து விட மாட்டோமா என ஆப்கானிஸ்தானியர்கள் அஞ்சி உயிரிழக்க காரணமாகின்றது.

நடப்புகளில் போரின் கொடிய காட்சிகளாக இவை பதிவாகின்றன. இவற்றுக்கு மத்தியிலேயே தலிபான்கள் தங்களது முகத்தை மிகக் கவனமாக கட்டமைக்க முயல்கின்றார்கள். 20 ஆண்டுகளுக்கு முன்பிருந்த நாங்கள் தற்போதில்லை பெண்களை மதிக்கின்றோம்; கற்க அனுமதிக்கிறோம்; பொதுவெளியில் பணியாற்ற அனுமதிக்கிறோம் எனத் தோற்றத்தை உருவாக்க முயல்கின்றனர்.

அதுவும் தற்போதைய நவீன ஊடகங்கள் குறிப்பாக சமூகவலைத்தளங்களை மிகவும் பாதுகாப்பாக சிறப்பாக தலிபான்களால் கையாள முடிகின்றது. ஐக்கிய அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பால் டுவிட்டருக்குள் செல்ல முடியாமல் இருக்காமல் தலிபான்கள் டுவிட்டரில் நடமாடுகின்றனர்.

ஆக, தற்கால ஒழுங்கில் தனிமைப்படுத்தப்பட்டு ஒன்றும் செய்ய முடியாது என உணர்ந்து நல்லெண்ணங்களை கட்டமைக்க தலிபான்கள் முயல்கின்றனர்.

ஆனால், நிஜத்தில் நிலைமைகள் வேறாக இருக்கின்றன. வட அத்லாண்டிக் ஒப்பந்த அமைப்புக்காக (நேட்டோ) பணியாற்றியவர்களை வீடு வீடாக தலிபான்கள் தேடுவதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

தவிர, ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலுக்கு முன்னதாக தலிபான்கள் கைப்பற்றிய இடங்களில் தொகையாக உணவு சமைத்துக் கொடுக்க மறுத்ததுக்காக தாயொருவர் கொல்லப்பட்டதுடன், பெண்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

அந்தவகையில், ஐக்கிய அமெரிக்கப் படைகளின் வெளியேற்றத்தோடு அதிவிரைவாக ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றியதற்கு அது மட்டும் காரணமில்லாமல் கிராமப் புறங்களில் தலிபான்களுக்கு காணப்பட்ட ஆதரவும் காரணம் என்பது நிதர்சனமாக உண்மையாகும்.

2001ஆம் ஆண்டு தலிபான்களின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஜனாதிபதியாக்கப்பட்ட ஹமிட் கர்சாயின் ஆட்சியில் நிலவிய மோசமான ஊழல்களை ஒதுக்குப்புறமான இடங்களில் உதவிகள் மூலம் தலிபான்களின் ஆதரவுகள் வளர்ச்சியடைந்திருந்தன.

இதுதவிர, தற்போதைய ஜனாதிபதி அஷ்ரப் கானியின் ஆட்சியிலும் இடை மட்ட, இராணுவங்களில் மோசமான ஊழல் நிலவியதே கிராமப் புறங்களில் தலிபான்களின் ஆதரவு அதிகரிப்பதற்கு காரணமாய் அமைந்திருந்தது.

எனினும், தலிபான்களின் தீர்மானமெடுப்பதை அறிந்த சிரேஷ்ட உறுப்பினர் ஒருவரின் நேர்காணலின்படி ஜனநாயகம் இல்லை எனவும், இஸ்லாமியச் சட்டமே அமுல்படுத்தப்படும் என தலிபான்கள் குறிப்பிட்டிருந்தது.

அந்தவகையில், இஸ்லாமியச் சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு கடுமையாக்கப்படும்போதே ஆப்கானிஸ்தானின் கிராமப் புறங்களில் தலிபான்களுக்கான ஆதரவு எவ்வாறிருக்கும் எனத் தெரியவரும்.

தவிர, சோவியத் ஒன்றியத்தின் ஆப்கானிஸ்தானின் ஆக்கிரமிப்பு முடிவில் தோன்றிய தலிபான்கள், வல்லரசுகளின் பின்புலமில்லாமல் இவ்வாறு மேலெழ முடியாது. தலிபான்கள் பாகிஸ்தானிலுள்ள இஸ்லாமியப் பாடசாலைகளில் இருந்தே தோற்றமெடுத்தபோதும், இதை பாகிஸ்தான் மறுத்து வருகின்றது.

தலிபான்களின் ஸ்தாபகர் முல்லா ஓமரும் கராச்சியிலுள்ள வைத்தியசாலை ஒன்றிலேயே இறந்ததாக பாதுகாப்புத் தகவல் மூலங்கள் கூறுவதுடன், அவருக்கு அடுத்த தலைவரும் பாகிஸ்தானில் வைத்தே ஐக்கிய அமெரிக்க ஏவுகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டிருந்தார்.

அந்தவகையில், 9/11 தாக்குதல்களுக்குப் பின்னர் அல் கொய்தாவின் ஸ்தாபகர் ஒசாமா பின்லேடனுக்கு அடைக்கலமளித்ததுக்காக தலிபான்களிடமிருந்த ஆப்கானிஸ்தான் மீது ஐ. அமெரிக்கா போர் தொடுத்ததிலிருந்து எதிர்த் தரப்பு வல்லரசுகளிடமிருந்தும் மறைமுகமான ஆதரவுகளை தலிபான்கள் பெறத் தொடங்கியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

ஏனெனில், தற்போது ஆப்கானிஸ்தானிலிருந்து ஒவ்வொரு மேற்குலக நாடுகளாக வெளியேறிக் கொண்டிருக்க எஞ்சியுள்ள நாடுகளின் தூதரகங்களை நோக்கினால் வெளிப்படை உண்மை புலப்படும்.

எவ்வாறெனினும், அனைத்து விடயங்களிலும் பாதிக்கப்பட்டவர்களாக ஆப்கானிஸ்தான் மக்களே உள்ளனர். உதாரணமாக, காபூல் விமானநிலையத்தை நோக்கி அனைவரும் படையெடுக்கையில், தங்களுக்காக பணிபுரிந்தவர்களை பாதுகாப்பாக மேற்குலக நாடுகள் அழைத்து வர முடியாத நிலையே காணப்படுகின்றது.. இச்சந்தர்ப்பத்தில் மேற்குலக நாடுகளுக்காக பணியாற்றியவர்கள் கைவிடப்பட்டவர்களாக உணருகின்றனர்.

அடுத்த நாட்டின் மூக்கை நுழைக்காது தமது நாட்டின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவமளித்த ஐ. அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் தொடர்ச்சியாக வந்த ஜனாதிபதி ஜோ பைடனும் வெளியே வேறு ஒன்றைச் சொன்னாலும் அதையே நிஜத்தில் பேணுகின்றார். ஏனெனில், ஆப்கானிஸ்தானில் இந்நிலைமை ஏற்படுமென அவருக்கு முன்னரே எச்சரிக்கப்பட்டுள்ளது.

எனினும், எத்தனை ஆண்டுகளானாலும் ஒரு தோல்வியாகவே அமையப் போகின்ற ஆப்கானிஸ்தான் மீதான படையெடுப்பை தன்னுடன் முடித்துக் கொள்ளும் நோக்கிலேயே ஜோ பைடன் செயற்பட்டிருக்கின்றார். அவரைப் பிழை சொல்லவும் முடியாது; ஏனெனில் உலகில் எல்லா நாடுகளும் இந்நிலைமையை நோக்கியே நகருகின்றன.

இதுதவிர, தலிபான்களுடன் ஆப்கானிஸ்தான் அரசாங்கத்தின் பங்கேற்பில்லாமல் நேரடியாகவே ஐ. அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்தியிருந்தது. ஜனாதிபதி கானியின் நிலைப்பாடாக ஆப்கானிஸ்தானின் எதிர்காலத்தை அவர்களே தீர்மானிக்க வேண்டும் என இருந்தபோதும், தலிபான்களுடன் ஏதாவதொரு அவசர இணக்கப்பாட்டை ஏற்படுத்துமாறு ஆப்கானிஸ்தான் அரசாங்கத்துக்கு அழுத்தம் வழங்கியிருந்த ஐ. அமெரிக்கா, தான் கௌரவமாக வெளியேறவே முனைந்திருந்தது.

அப்படிப் பார்க்கும்போது ஆப்கானிஸ்தானை ஆப்கானிஸ்தான் இஸ்லாமியக் குடியரசு என மாற்றி தமது கொடியை ஏற்றியுள்ள தலிபான்களுக்கு ஜலாலாபாத்திலிருந்து ஆரம்பித்த எதிர்ப்பானது காபூல் உட்பட ஏனைய நகரங்களுக்கும் பரவியுள்ளது. ஆப்கானிஸ்தானியர்களே தமது தலைவிதியை தீர்மானிப்பதற்கு அவர்களே இவ்வாறு போராட வேண்டியுள்ளது. ஆனால் இது தொடர்ச்சியாக நிலைத்திருக்குமா என்பதே கேள்விக்குறியாக இருக்கின்றது.

மறுபக்கம் தலிபான்களும் தொடர்ச்சியாக நிலைத்த தன்மையில் நிலை கொள்வார்கள் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. ஏனெனில், சிரேஷ்ட உறுப்பினர்களிடத்தே உறுதி இருந்தாலும் இளம் போராளிகள் அவ்வாறு இருப்பார்களா என்பது கேள்விக்குறியே ஆகும். சிறுவர் பூங்காக்களிலும், உடற்பயிற்சிக் கூடங்களிலும் அவர்கள் அறக்கும் காட்சிகளே இதற்கு சாட்சி ஆகும்.

அந்தவகையில், சமூகவலைத்தளங்களில் காணக் கிடைப்பது போல சினிமாக்கள் வாழ்க்கையை பிரதிபலிப்பதாக கமல்ஹாசனின் விஸ்வரூபம் படத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பது போல ஆப்கானிஸ்தான் மக்களே துன்பங்களை அனுபவிப்பதுடன், மூளைச்சலவை செய்யப்பட்ட போராளிகள் இளகிய மனமுடையவர்களாகவே காணப்படுகின்றனர்.

தலிபான்களுக்கு பின்புலம் காணப்பட்டாலும் அவர்களைக் கையாளுவது சிக்கலான ஒரு விடயமாகவே இருக்கப் போகின்றது. எனவே எல்லாவற்றுக்கும் காலம்தான் பதில் சொல்லப் போகின்றது.

# டோக்கியோ 2020 ஒலிம்பிக்கில்





முருகவேல் சண்முகன்












கொரோனா பரவலுக்குள் சந்தேகத்துக்கிடமானதாக டோக்கியோ 2020 ஒலிம்பிக்கானது ஒருவாறாக எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஆரம்பித்து வெற்றிகரமாக நிறைவடைந்திருக்கிறது.

இந்த ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பிக்கும் வரையிலேயே சந்தேகங்கள் நிலவியபோதும், அது ஆரம்பித்தவுடன் உலகத்தை அதனுடன் கட்டிப்போட வைத்து விட்டது. இக்கொரோனா பரவல் காலத்தில் இது ஒரு நல்ல மாற்றமாக இருந்தது.

அந்தவகையில், இப்பத்தியானது இந்த ஒலிம்பிக்கில் நிகழ்த்தப்பட்ட சாதனைகள், கண்கலங்க வைத்த நிகழ்வுகள், சாதனைகளை நோக்குகிறது.

முதலாவதாக ஒலிம்பிக் ஆரம்பிப்பதற்கு முன்னரே முழு உலகத்தாலும் எதிர்பார்க்கப்பட்டிருந்த சிமோன் பைல்ஸின் போட்டியிலிருந்து விலகல் முடிவானது ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

முதலில் சறுக்கியிருந்த பைல்ஸ் பின்னர் சுதாகரித்துக் கொண்டு அனைத்து தனிநபர் குழு ஜிம்னாஸ்டிக் போட்டிகளின் இறுதிப் போட்டிகளுக்கு தகுதி பெற்றிருந்தார்.

இந்நிலையில், முதலாவது குழுநிலைப் போட்டியிலேயே இடைநடுவிலேயே விலகியிருந்த பைல்ஸ், மன அழுத்தம் காரணமாக ஒவ்வொன்றாக தனிநபர் போட்டிகளிலிருந்து விலகி இறுதியாக ஒரு தனிநபர் போட்டியிலேயே பங்கேற்றிருந்தார்.

இவ்விடயமானது ஏமாற்றத்தை அளித்திருந்தாலும், இனிவரும் காலங்களில் தனிநபர் உளநலப் பிரச்சினைகளை முக்கியமாகக் கையாள வேண்டும் என உணர்த்தியிருந்தது.

இதேவேளை, ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டிக்கான உலக சாதனைக்குச் சொந்தக்காரரான தென்னாபிரிக்காவின் வான் நிக்கரெக், அரையிறுதிப் போட்டிகளுடனேயே விலகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. முழங்கால் சத்திரசிகிச்சையை மேற்கொண்ட பின்னர் அவரது பெறுபேறுகள் முன்னரைப் போல இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஏமாற்றம் இவ்வாறாக இருக்க தடகளப் போட்டிகள் ஆரம்பித்ததைத் தொடர்ந்து கட்டாரின் முட்டாஸ் எஸ்ஸா பார்ஷிம்மின் செய்கை நெகிழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

ஆண்களுக்கான உயரம் பாய்தலில் பார்ஷிம்மும், இத்தாலியின் ஜியன்மார்கோ தம்பேரியும் ஒரேயளவு உயரத்தையே பாய்ந்திருந்த நிலையில், இரண்டு பேரும் தங்கப் பதக்கங்களைக் கொண்டிருக்கலாமா என பார்ஷிம் வினவிய நிலையில், அதற்கு அதிகாரிகளும் இணங்கியிருந்த நிலையில் இருவரும் தங்கப் பதக்கங்களை பகிர்ந்திருந்தனர்.

இதேவேளை, ஆண்களுக்கான 110 மீற்றர் தடை தாண்டலில் தங்கப் பதக்கத்தை வென்ற ஜமைக்காவின் ஹன்ஸ்லே பார்ஷ்மெண்டின் செய்கை நன்றியறிதலை உணர்த்தியிருந்தது.

இந்த ஆண்களுக்கான 110 மீற்றர் தடை தாண்டலின் அரையிறுதிப் போட்டிக்கு செல்லாமல் மாறி நீச்சல் தடாகத்துக்கு பார்ஷ்மெண்ட் சென்ற நிலையில், அவர் தனது போட்டியிடத்துக்குச் செல்ல தன்னார்வலப் பணியாளர் ஒருவரே பணம் கொடுக்க வாடகைக் காரில் சென்றிருந்தார்.

இந்நிலையில், போட்டி முடிவடைந்த பின்னர் அந்த தன்னார்வலப் பணியாளரை தேடிப் பிடித்த பார்ஷ்மெண்ட், அப்பணத்தை மீளக் கொடுத்ததுடன், தனது தங்கப் பதக்கத்தைக் காட்டி நன்றியைச் செலுத்தியிருந்தார். இவ்விடயமும் ஒலிம்பிக்கோடு பரவலாகப் பகிரப்பட்டிருந்தது.

இதேவேளை, ஒலிம்பிக்கில் அதிகம் கவனிக்கப்படும் போட்டிகளாக பெண்களுக்கான 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டப் போட்டிகளில், தான் றியோ 2016-இல் வென்றதை ஜமைக்காவின் எலைனி தொம்ஸன் ஹெரா தக்க வைத்திருந்தார்.

இந்நிலையில், ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் இத்தாலியின் லமொன்ட் மார்செல் ஜேக்கப்ஸ் தங்கப் பதக்கத்தை வென்றதுடன், 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் கனடாவின் அன்ட்ரே டி கிராஸ் தங்கப் பதக்கத்தை வென்றிருந்தார்.

இதுதவிர, சாதனைகளாக தடகளத்தில் பெண்களுக்கான முப்பாய்தலில் 15.67 மீற்றர் தூரம் பாய்ந்து உலக சாதனையை வெனிசுவேலாவின் யுலிமார் றோஜாஸ் நிகழ்த்திருந்தார்.

பெண்களுக்கான 400 மீற்றர் தடை தாண்டல் போட்டியில், போட்டித் தூரத்தை 51.46 செக்கன்களில் கடந்து, தனது உலக சாதனையை ஐக்கிய அமெரிக்காவின் சிட்னி மக்லொலின் முறியடித்திருந்தார்.

ஆண்களுக்கான 400 மீற்றர் தடை தாண்டலிலும் போட்டித் தூரத்தை 45.94 செக்கன்களில் கடந்த நோர்வேயின் கார்ஸ்டன் வார்ஹொல்ம், தனது உலக சாதனையை முறியடித்திருந்தார்.

இதேவேளை, ஒலிம்பிக்கில் வெற்றிகரமான வீரராக ஐக்கிய அமெரிக்காவின் நீச்சல்வீரரான கலெப் றஸல் ஐந்து தங்கப் பதக்கங்களை வென்றிருந்தார். அடுத்ததாக அவுஸ்திரேலியாவின் நீச்சல் வீராங்கனையான எம்மா மக்கியோன் நான்கு தங்கப் பதக்கங்களையும், மூன்று வெண்கலப் பதக்கங்களையும் வென்றிருந்தார்.

இந்நிலையில், ஆண்களுக்கான 4*100 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் இத்தாலி தங்கப் பதக்கம் வென்றதுடன், பெண்களில் ஜமைக்கா தங்கப் பதக்கம் வென்றிருந்தது.

இதேவேளை, பெண்களுக்கான, ஆண்களுக்கான 4*400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் ஐ. அமெரிக்கா தங்கப் பதக்கம் வென்றிருந்தது.

இந்நிலையில், அயல் நாடான இந்தியாவானது தடகளத்தில் தெற்காசிய நாடு ஒன்று பெறும் முதல் தங்கப் பதக்கமாக, நீரஜ் சோப்ரா மூலம் ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் தங்கப் பதக்கம் வென்றிருந்தது.

LK Newspapers Viber Community

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை, 21 ஒகஸ்ட் 2021, இல. 8, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.